ISSN: 2582-5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

சனி ❖ நவம்பர். 04, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 32 ❖ ரூ.10







### 100-வது சுதந்திர தினத்தில் மற்ற நாடுகளை வழிநடத்தும் நாடாக

# இந்தியா மாறும்

## ஜி20 மாநாடு தலைமை பிரகடனம் மற்றும் அதிநவீன ஆற்றல் தொழில் நுட்பங்கள் குறித்த தேசிய கருத்தரங்கில் ஆளுநர் ரவி பேச்சு

காரைக்குடி , நவ. 4-

"100-வது சுதந்திர தினத்தில் மற்ற நாடுகளை வழிநடத்தும் நாடாக இந்தியா மாறும்" என்று தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பேசினார்.




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஜி20 மாநாடு தலைமை பிரகடனம் மற்றும் அதிநவீன ஆற்றல் தொழில் நுட்பங்கள் குறித்த தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணை வேந்தர் க.ரவி வரவேற்பு வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியது: "பழங்காலத்தில் இந்தியா பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறிய நாடாகஇருந்தது.ஆனால், முகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் அல்லாதோருக்கு அதிக வரி விதித்தனர். அதைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர்கள் நம் நாட்டின் சொத்துகளை சுரண்டிச் சென்றனர். இதனால்பொருளாதாரம் சரிவடைந்தது. ஆனால், தற்போது உலக அளவில் பொருளாதாரத்தில் வளர்ந்த நாடாக இந்தியா உள்ளது. விரைவில் 100 சதவீதம் மின் இணைப்பை பெற்ற நாடாக மாறும்.

சுதந்திரமடைந்த 70 ஆண்டுகளில் ஏழைகளும், நோய் வாய்ப்பட்டவர்களும் அதிகளவில் இருந்தனர். ஆனால், தற்போது அந்த நிலைமாறிவருகிறது.கடந்த ஆட்சியில் குறிப்பிட்ட சில துறைகளில் மட்டுமே அக்கறை காட்டினர். ஆனால், தற்போது அனைத்துதுறைகளையும் இணைத்து மனித இன வளர்ச்சியை மேம்படுத்தி வருகின்றனர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது போல் உலகில் உள்ள அனைத்து மக்களையும் ஒரே மாதிரியாக மத்திய அரசு பார்க்கிறது. 80 சதவீதம் கிராமங்களில் பைபர் கேபிள் மூலம் இணைய வசதி கொடுத்துள்ளோம். தொழில்நுட்ப வசதி பணக்காரர்கள் மட்டுமின்றி அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது.

50 கோடி மக்களுக்கு மேல் வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டன. இதன்மூலம் அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும் நேரடியாக மக்களுக்கு செல்கின்றன. தேசிய சூரிய சக்தி கூட்டமைப்பு 2016-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதில் தற்போது 100-க்கும் மேற்பட்ட நாடுகள் முதலீடு செய்துள்ளன. தற்போது சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி 25 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் ஆங்கில மருத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆயுஷ் திட்டம் நம் நாட்டில் உள்ள இயற்கை மருத்துவத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஜிடிபி வளர்ச்சியை விட மனித நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. கடந்த காலங்களில் ஜி20 மாநாட்டில் குறிப்பிட்ட நாடுகள் மட்டுமே பங்கேற்றன. இந்தியா தலைமை ஏற்றதன் மூலம் அனைத்து நாடுகளையும் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. முக்கியமாக, பின்தங்கிய ஆப்பிரிக்கா நாடுகள் இணைக்கப்பட்டுள்ளன.

கரோனா காலக்கட்டத்தில் பல நாடுகள் தடுப்பூசிகளை கண்டறிந்து, அவர்களே பயன்படுத்தி கொண்டனர். ஆனால், இந்தியா 115 நாடுகளுக்கு தடுப்பூசிகளை விநியோகித்து, அனைவருக்கும்கிடைக்கச் செய்தது. நாட்டில் 100 கோடி தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நம் நாட்டில் பேரிடர் கட்டமைப்பை வலுப்படுத்தி வருகிறோம். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள அனைத்து மக்களும் சேர்ந்து பாடுபட வேண்டும். ஹைட்ரஜன் பசுமை எரி சக்தி ஆய்வில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதில் அழகப்பா பல்கலை.யும் ஈடுபட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் வரை மாற்று எரிசக்தி மூலம் 131 ஜிகா வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. அது 2030-ம் ஆண்டுக்குள் 500 ஜிகா வாட்ஸாக உயரும்.

மருந்துகள் விலை குறைக்கப்பட்டதால் ஏழைகள் பயன் பெற்று வருகின்றனர். தமிழகம் முன்னேறிய மாநிலமாக உள்ளது. எனினும், பின்தங்கிய பகுதிகளும் உள்ளன. அவற்றை ஒருங்கிணைத்து மத்திய அரசு முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கடந்த காலங்களில் சீனாவுடன் இந்தியா மட்டுமேபோட்டியிட்டது. தற்போது அனைத்து நாடுகளுடன் போட்டியிட்டு வருகின்றன. 100-வது சுதந்திர தினத்தில் இந்தியா மற்ற நாடுகளை வழிநடத்தும் நாடாக மாறும். வரும் 2070-க்குள் அணுசக்தி, கார்பன் பூஜ்யமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாம் இயற்கை வளங்களை அதிகளவில் பயன்படுத்தி வருகிறோம். இனி சூரிய சக்தி போன்ற மாற்று எரி சக்திகளை பயன்படுத்தி இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்" என்று ஆளுநர் ரவி கூறினார்.

நிகழ்ச்சியின் நிறைவாக பதிவாளர் (பொ) ராஜ்மோகன் நன்றியுரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் திருவாரூர் மத்திய பல்கலை, துணை வேந்தர் கிருஷ்ணன், திருச்சி பாரதிதாசன் பல்கலை., செல்வம், கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்கள் ஜெய காந்தன், அருண், அலமேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை ஆவின் பால் உற்பத்தி நிலையத்தினை, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்/இலால்குடி சட்டமன்ற உறுப்பினர் சௌந்திரபாண்டியன் தலைமையில்,மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா முன்னிலையில், பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜு, திருவாடணை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பாப்பிரெட்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கோவிந்தசாமி, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.தி.சதன் திருமலைக்குமார், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னதுரை, திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் ஆகியோர் இணைந்து நேற்று ஆய்வு மேற்கொண்டனர். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## வருமானவரித்துறை, அமலாக்கத்துறை எல்லாம் பாஜகவின் சார்பு அணிகள் : உதயநிதி ஸ்டாலின் கிண்டல்

சென்னை, நவ. 4-

அரசியல் கட்சிகளில் உள்ள பல்வேறு அணிகளைப் போல் பாஜகவின் அணிகளாக வருமானவரித்துறை மற்றும் அமலாக்கத்துறை ஆகிய விசாரணை அமைப்புகள் செயல்படுவதாக தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.




திமுக இளைஞரணிசார்பில் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க கோரி, தமிழ்நாடு முழுவதும் 50 லட்சம் கையெழுத்து பெறும் இயக்கம்நடைபெற்றுவருகிறது. இதையொட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நேற்று முதல் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களையும் நேரில் சந்தித்து கையெழுத்துப் பெறும் பணியைத் தொடங்கி இருக்கிறார். அதன்படி சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று காங்கிரஸ் கட்சி தலைவர்களை அவர் நேரில் சந்தித்தார்.

அப்போது மாநில தலைவர் கே.எஸ்.அழகிரி, மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் நீட் தேர்வு விலக்கு கோரும் கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டனர்.

இதை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் உதயநிதிஸ்டாலின், "நீட் தேர்வு விவகாரம் திமுகவின் பிரச்சினை மட்டுமல்ல, அது தமிழக மாணவர்களின் பிரச்சினை. நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அனைத்து கட்சியினரையும் நேரில் சந்தித்து கையெழுத்து பெற இருக்கிறோம்.

தமிழக ஆளுநரை மாற்ற வேண்டாம் என ஏற்கெனவே முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணியின் பிரச்சாரத்தை, ஆளுநர் ஏற்கெனவே துவங்கி விட்டார்" என்றார்.

அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய இடங்களில் நேற்று காலை முதல் வருமான வரித்துறை சோதனைகள் நடைபெற்று வருவது குறித்தான கேள்விக்கு பதிலளித்த உதயநிதி, "அரசியல் கட்சிகளில் வழக்கறிஞர் அணி, மருத்துவர் அணி போன்ற பல்வேறு அணிகள் இருப்பது போல், பாஜகவின் அணிகளாக வருமானவரித் துறையும், அமலாக்கத் துறையும் செயல்படுகிறது" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.



▶ 03.11.2023 முதல் 06.11.2023 முடிய சில மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா, மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் நேற்று (03.11.2023) ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி. அ. ராமன், ஆகியோர் உடனிருந்தனர்.

## அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய இடங்களில் தொடருது வருமான வரித் துறை சோதனை

சென்னை , நவ. 4-

தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய பல்வேறு இடங்களில் வருமான வரித் துறை சோதனை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.



தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய இடங்களில் வருமான வரித் துறை சோதனை மேற்கொண்டு வருகிறது. அமைச்சரின் வீடு மற்றும் அவருக்கு சொந்தமான கல்வி நிறுவனம் உட்பட பல்வேறு இடங்களில் இந்தச் சோதனை வெள்ளிக்கிழமை காலை முதல் நடைபெற்று வருகிறது. சென்னை மற்றும் திருவண்ணாமலை என தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அமைச்சர் எ.வ.வேலு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைகளை கவனித்து வருகிறார். இதனால், பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்கள் வீட்டில் சோதனை நடைபெற்று வருகிறது. கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் போன்ற பிரிவுகளையும் அமைச்சர் எ.வ.வேலு கவனித்துவருகிறார். அதனால், அது சார்ந்த ஒப்பந்ததாரர்கள் வீட்டிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், எ.வ.வேலுவுக்கு சொந்தமான நிறுவனங்கள் மட்டுமல்லாது, அவரது உறவினர்கள் தலைமை வகிக்கும் நிறுவனங்களிலும் வருமான வரித் துறை சோதனை மேற்கொண்டுள்ளது.

காசா கிராண்ட், அப்பாசாமி ரியல் எஸ்டேட் மற்றும் அருணை கல்வி நிறுவனங்கள் ஆகிய 3 நிறுவனங்களை மையப்படுத்தி வருமானவரித்துறை அதிகாரிகள் இந்தச் சோதனையை காலை முதல் மேற்கொண்டு வருகின்றனர். காசா கிராண்ட் மற்றும் அப்பாசாமி ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டும் நிறுவனங்களாகும். எனவே, இந்நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி வருமானம் எவ்வளவு ஈட்டப்பட்டுள்ளது? அந்த வருமானங்களுக்கு முறையாக வரி செலுத்தப்பட்டுள்ளதா? வரி ஏய்ப்பு ஏதேனும் நடந்திருக்கிறதா என்ற கோணங்களில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த சோதனையானது சென்னை,திருவண்ணாமலை செங்கல்பட்டு, விழுப்புரம், கோவை மற்றும் கரூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 80-க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. குறிப்பாக, சென்னையில் மட்டும் அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய 13 இடங்களில் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

நேற்று காலை துவங்கி, 7 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்று வரும் இந்தச் சோதனையில் பல முக்கிய ஆவணங்களை வருமான வரித் துறை கைப்பற்றியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், சோதனை இன்று வரை தொடரலாம் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக 2021 சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்னதாவும் வருமான வரி சோதனை அமைச்சர் எ.வ.வேலுவுக்கு சொந்தமான இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த மாதம் முன்னாள் மத்திய அமைச்சரும் திமுக எம்பியுமான ஜெகத்ரட்சகன் தொடர்புடைய இடங்களில் சோதனை மேற்கொண்டது வருமான வரித் துறை. இதில் ரூ.400 கோடி மதிப்பிலான கணக்கில் வராத கட்டண ரசீதுகள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இன்று

## 4-11-2023

சக வருடம் 1945 கார்த்திகை 13

வல்லாரை கீரை தினமும் சாப்பிட நினைவாற்றல் பெருகும்

| சோபகிருது ஐப்பசி 18 | NOV - SAT சனி | ரபிஉல்ஆகிர் 19 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 308 / 057 | |

தேய். ஸப்தமி 52.53 (கா. 03.13) புனர்பூசம் 12.09 (கா. 10.56) தியாஜ் 34.03 அகஸ் 29.09 சித்த. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் வரதராஜர் மூலவருக்கு திருமஞ்சன சேவை. உத்திரமாயூரம் வள்ளலார் சன்னதியில் பஞ்ச மூர்த்திகளுடன் புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌரி.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 10; சந்திராஷ்டமம் கேட்டை, மூலம்; கரணம் : 12-1.30; சூரிய உதயம் : 6.04

முதல் கோணல் முற்றும் கோணல்

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | மேன்மை |
| ரிஷபம் | நலம் |
| மிதுனம் | சினம் |
| கடகம் | வரவு |
| சிம்மம் | இரக்கம் |
| கன்னி | நட்பு |
| துலாம் | எதிர்ப்பு |
| விருச்சி | லாபம் |
| தனுசு | சிரமம் |
| மகரம் | அசதி |
| கும்பம் | புகழ் |
| மீனம் | பெருமை |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## சிவகங்கையில் இந்தோ திபெத் பாதுகாப்பு படை பயிற்சி நிறைவு பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்த அணிவகுப்பு மரியாதை

சிவகங்கை, நவ. 4-

சிவகங்கை அருகே இந்தோ திபெத் பாதுகாப்பு படை மையத்தில் பயிற்சி நிறைவு வகுப்பு விமர்சியாக நடைபெற்றது.

சிவகங்கை அருகே இலுப்பகுடியில் உள்ள இந்தோ திபெத் பாதுகாப்பு படை பயிற்சி மையத்தில் கடந்த 44 வாரங்களாக வீரர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. 481 முதல் 485 படை பிரிவை சேர்ந்த 349 வீரர்கள் தங்கள் பயிற்சியை நிறைவு செய்தனர்.

இதை முன்னிட்டு ஐ.ஜி. அசோக்குமார், டி.ஐ.ஜி. அக்ஸல் சர்மா முன்னிலையில் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. அப்போது வீரர்கள் தேசிய கொடி முன்பு இன்னுயிரை தந்தும் நாட்டை காப்போம் என்று உறுதிமொழி எடுத்தனர். பல்வேறு பயிற்சியில் சிறப்பாக செயல்பட்ட 7 வீரர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்பட்டது. பின்னர் வீரர்களின் கண்கவர் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. இது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.



## தமிழகத்தில் நடைபெறும் வருமான வரித்துறை சோதனை அரசியல் நாடகம் : அமைச்சர் மனோ தங்கராஜ்

கன்னியாகுமரி, நவ. 4

"தமிழகத்தில் நடைபெற்று வரும் வருமான வரித்துறை சோதனை அரசியல் நாடகம் என்பது அனைவருக்கும் தெரியும்" என்று தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

கன்னியாகுமரியில் தமிழக பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், தொடர்ந்து தமிழக அமைச்சர்களை குறிவைத்து வருமான வரித்துறை சோதனைகள் நடத்தப்படுகிறதே? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,"இந்த வருமான



வரித்துறை சோதனைகளை பொதுமக்களே எப்படி பார்க்கின்றனர், என்பது அனைவரும் அறிந்ததே. இன்றைக்கு தமிழக அரசு நிறைவேற்றியுள்ள 28 மசோதாக்கள் ஆளுநரிடம் காத்திருக்கிறது. அதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு யோக்கிதை இல்லை. தமிழக அரசும், கேரள அரசும் இன்று நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

மக்கள் பணியை செய்யவிடாத ஒரு மத்திய அரசு, மக்கள் பணி செய்வதற்கு இதுபோன்ற தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இது ஒரு அரசியல் நாடகம் என்பது அனைவருக்குமே தெரியும். முதலில் மத்திய அரசு அவர்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும். மத்திய அரசு மற்றும் மத்திய அரசில் அங்கம் வகிக்கக்கூடிய அமைச்சர்களின் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது. அவர்களுக்கு இந்த சோதனை பொருந்துமா? அவர்களுக்கு ஏன் இது பொருந்தவில்லை? இதுகுறித்தும் மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் கூறினார்.

## விருத்தாசலம் அருகே வெறிநாய் கடித்து 7 வயது சிறுவன் உட்பட 10 பேர் மருத்துவமனையில் அனுமதி

கடலூர் : நவ. 4, கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகே வெறிநாய் கடித்து 7 வயது சிறுவன் உட்பட 10 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடலூர் மாவட்டத்தை பொறுத்தவரையில் 6 நகராட்சி, 1 மாநகராட்சி 683 ஊராட்சி பகுதிகள் உள்ளது. இதில் பெரும்பாலான இடங்களில் வெறிநாய்நாய்கூட்டம் அதிகமாக இருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது. தொடர்ந்து இதுப்போல் நாய்களை அப்புறப்படுத்த வேண்டும் அதிகமாக நாய்கள் சுற்று திரிவதால் குழந்தைகளை வெளியே அனுப்பமுடியவில்லை என்று குற்றச்சாட்டும் எழுத்து வருகின்றது.



இந்நிலையில் விருத்தாசலம் அருகே கருவேப்பிலங்குறிச்சி ஒரு வெறிநாய் தொடர்ந்து பொதுமக்கள் யார் சென்றாலும் கடித்து வந்ததாக கூறப்படுகிறது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிலரை கடித்துள்ளது, நேற்று 10க்கும் மேற்பட்டோரை வெறிநாய் கடித்த காரணத்தினால் அவர்கள் கருவேப்பிலங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் விருத்தாசலம் அரசு மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளர்கள்.

குறிப்பாக 7 வயது சிறுவனை மிக கொடூரமாக கடித்ததற்கு காரணம் பெரியவர்களாக இருந்தால் நாய்யை துரத்தி விட்டு அங்கு இருந்து தப்பி சென்றுருப்பார்கள், 7 வயது சிறுவனால் அங்கு இருந்து தப்ப முடியாமல் அந்த நாய் கடிதத்தில் கொடூரமாக காயங்கள் ஏற்பட்டுள்ளது. அவரை தற்போது மீட்டு விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். தொடர்ந்து இதுபோல் மாவட்டம் முழுவதும் நாய்கள் கூட்டம் கூட்டமாக சுற்றி திரிவதும் பொதுமக்கள் ஏற்கனவே பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளை எழுப்பிவருகின்றனர். ஏற்கனவே மாநகராட்சி, நகராட்சி நாய்களை பிடித்து அப்புறப்படுத்தும் ஆனால் தற்போது அது செய்யப்படாத காரணத்தினால் இதுபோல் ஒரு கொடூரமான நிகழ்வு ஏற்பட்டுள்ளது.




## தூத்துக்குடி புதுமணத் தம்பதி கொலையில் திடீர் திருப்பம் : பெண்ணின் தந்தை கைது

தூத்துக்குடி : நவ. 4, தூத்துக்குடியில் 3 தினங்களுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்ட இளம் ஜோடி வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பெண்ணின் தந்தையை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி முருகேசன் நகரைச் சேர்ந்தவர் கூலித்தொழிலாளி வசந்தகுமார். இவரது மகன் மாரிச்செல்வம் (23), தனியார் ஷிப்பிங் நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில் மாரிச்செல்வமும், திருவிக நகரைச் சேர்ந்த பால் வியாபாரம் செய்து வரும் முத்துராமலிங்கம் என்பவரின் மூத்த மகள் கார்த்திகாவும் நீண்ட நாட்களாக காதலித்து வந்துள்ளனர்.

கார்த்திகாவும், மாரிச்செல்வமும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், கார்த்திகாவின் குடும்பத்தினர் வசதி படைத்தவர்கள் எனக்கூறப்படுகிறது. இந்நிலையில் மாரிசெல்வம், கார்த்திகா காதல் விவகாரம் வீட்டிற்கு தெரியவர கார்த்திகாவின் பெற்றோர் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஆனால், காதலில் உறுதியாக இருந்த இளம் ஜோடி, தேவர் ஜெயந்தி அன்று திட்டமிட்டு வீட்டை விட்டு வெளியேறி, நண்பர்கள் உதவியுடன் பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்து கொண்டனர்.

அதே நேரத்தில் மாரிச்செல்வத்தின் குடும்பத்தினர் திருமணத்துக்கு



ஆதரவாக இருந்ததுடன் இருவரையும் தங்கள் வீட்டில் தங்க வைத்துள்ளனர். இதற்கிடையே இரு தினங்களுக்கு முன்பு மாரிச்செல்வம் வீட்டுக்கு வந்த பெண்ணின் தந்தை முத்துராமலிங்கம் உள்ளிட்டோர் மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 3 இருசக்கர வாகனங்களில் வந்த 6 பேர் காதல் ஜோடியை சரமாரியாக வெட்டிக் கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற காவல் துறையினர் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, குற்றவாளிகளைப் பிடிக்க 3 தனிப்படைகள அமைத்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் கார்த்திகாவின் தந்தை முத்துராமலிங்கத்தை போலீஸார் நேற்று கைது செய்தனர். உறவினர்கள் கருப்பசாமி, பரத் ஆகிய மூன்று பேர்கள் மீது சிப்காட் போலீஸார் வழக்குப் பதிவுசெய்து அவர்களைத் தேடி வருகின்றனர். காதல் திருமணம் செய்த மகளை தந்தையே கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## நாட்டில் வேலையின்மை விகிதம் 10% க்கும் அதிகமாக உள்ளது : மல்லிகார்ஜுன கார்கே

*டெல்லி : நவ. 4, நாட்டில் வேலையின்மை விகிதம் 10%க்கும் அதிகமாக உள்ளது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக X தளத்தில் பதிவிட்டுள்ள அவர் ; நாட்டில் வேலையின்மை விகிதம் 10% க்கும் அதிகமாக உள்ளது. மந்தநிலை மற்றும் பணவீக்கத்திற்கு மத்தியில், மோடி அரசாங்கம் இதுபோன்ற "வேலையின்மை கண்காட்சியை" ஏற்பாடு செய்துள்ளது, இது கோடிக்கணக்கான இளைஞர்களை வீடு வீடாக அலையவைக்கிறது.*



*பிரதமர் மோடி சில ஆயிரம் "ஏற்கனவே அனுமதி" மற்றும் "பதவி உயர்வு" ஆட்சேர்ப்பு கடிதங்களை விநியோகித்து நீங்கள் செய்யும் PR ஸ்டண்ட், பல ஆண்டுகளாக வேலைக்காகக் காத்திருக்கும் அந்த இளைஞர்களின் நம்பிக்கையிலும் காயத்திலும் உப்பு தூவி விடுவது போன்றது. SC, ST, OBC மற்றும் EWS ஆகிய இளைஞர்கள் உங்கள் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். கோவிட் காலத்தில் இழந்த வேலைகளில், 90 லட்சம் நல்ல ஊதியம் பெறும் வேலைகள் முற்றிலும் மறைந்துவிட்டன. கிராமப்புற இந்தியாவின் நிலை மோசமாக உள்ளது. MNREGA க்கான தேவை 20% அதிகரித்துள்ளது, இது வரலாற்று ரீதியான 10.8% வேலையின்மை விகிதத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது.*

*பட்டதாரி இளைஞர்களிடையே வேலையின்மை விகிதம் 13.4% என்று அரசாங்கத்தின் PLFS தரவுகளே கூறுகின்றன. இப்போது உங்கள் தவறான விளம்பரங்களும் கவனத்தைத் திசை திருப்பும் புதிய தந்திரங்களும் இனி வேலை செய்யாது. 5 மாநிலத் தேர்தலாக இருந்தாலும் சரி, வரவிருக்கும் மக்களவைத் தேர்தலாக இருந்தாலும் சரி, இந்திய இளைஞர்கள் தங்களை வஞ்சித்தவர்களை நிச்சயம் பழிவாங்குவார்கள். நாட்டின் வேலையில்லா இளைஞர்கள்தான் பாஜக ஆட்சிக்கு கவுண்டவுன் என்ற சங்கை ஊதுவார்கள் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டுள்ளார்.*

## கமல்நாத் மாடல் என்பது ஊழல், குற்றம், கமிஷன் நிறைந்தது : ம.பி.முதல்வர் சிவராஜ் சவுகான் சாடல்

போபால் : நவ. 4, மத்தியப் பிரதேச காங்கிரஸ் தலைவர் கமல்நாத்தின் ஆட்சி மாதிரி என்பது ஊழல், குற்றங்கள், கமிஷன்களை உள்ளடக்கியது என்று அம்மாநில முதல்வர் சிவராஜ் சவுகான் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மத்தியப் பிரதேச மாநில சட்டப்பேரவைக்கு இன்னும் இரண்டு வாரங்களில் தேர்தல் நடைபெற இருக்கிறது. இதற்காக கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருகின்றன. மாநிலத்தின் திகாம்கர் மாவட்டத்தில் உள்ள பிரித்விபூர் சட்டப்பேரவைத் தொகுதியில் நடந்த தேர்தல் பேரணியில் கலந்து கொண்டு பேசிய முதல்வர் சிவராஜ் சவுகான் கூறுகையில், "தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் கமல்நாத் மாடல் வரும் என்று சொல்கிறார். கமல்நாத் மாடல் என்பது என்ன? ஊழல், குற்றங்கள், கமிஷனை உள்ளடக்கியதே அது.



எனது அரசு அமைந்தால் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளில் சேரும் ஏழை எளிய மாணவர்களின் கல்விக்கட்டணத்தை அரசே செலுத்தும். ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரசு வேலை வழங்கப்படும். சமையல் எரிவாயு சிலிண்டர் ரூ.450-க்கு வழங்கப்படும், உயர்த்தப்பட்ட மின்கட்டணம் குறைக்கப்படும்.

இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை காங்கிரஸ் கட்சியால் ஒருபோதும் வழங்க முடியாது. கடந்த 2018 டிசம்பர் முதல் 2020 மார்ச் வரையிலான கமல்நாத்தின் ஆட்சி காலத்தில் பைகா, பரியா, சஹாரியா பழங்குடிகளுக்கு வழங்கப்பட்ட ரூ.1,000 உதவித்தொகை உள்ளிட்ட திட்டங்களை நிறுத்தியதன் மூலம் கமல்நாத் அரசு பாவம் செய்துள்ளது.

எனது ஆட்சியில் முதன்மையான திட்டம் 'லட்லி பெஹ்னா யோஜனா'. இதன்மூலம் பெண் பயனாளிகள் ஒருகுறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் பெற்று வருகிறார்கள். இந்தத்தொகை படிப்படியாக ரூ.3,000 வரை உயர்த்தப்படும். மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் அந்தத் தொகை நிறுத்தப்படும்" என்று முதல்வர் சிவராஜ் சவுகான் பேசினார். மத்தியப்பிரதேச காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கு மாதம் தோறும் ரூ.1,500 உதவித்தொகை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்தியப் பிரதேச மாநில சட்டப்பேரவைக்கு இந்த மாதம் 17ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற இருக்கிறது. வாக்கு எண்ணிக்கை டிச.3 ஆம் தேதி நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

## பாஜக மாநில நிர்வாகிகளை வளைக்கும் அதிமுக : அதிர்ச்சியில் அண்ணாமலை

*சேலம் : நவ. 4, தமிழக பாஜகவின் ஓபிசி அணியின் மாநிலச் செயலாளரும், சேலம் கோட்டமேட்டுப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான சி.தங்கராஜ், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் தன்னை அக்கட்சியில் இணைத்துக்கொண்டார். இது பாஜவினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*



*தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை மீது அதிருப்தி கொண்ட முக்கிய பொறுப்புகளில் உள்ள நிர்வாகிகள் பலர் , அக்கட்சியில் இருந்து ஒவ்வொருவராக வெளியேற தொடங்கியுள்ளனர். அக்கட்சியில் இருந்து வெளியேறும் நிர்வாகிகளை அதிமுக தலைமை அரவணைக்கத் தொடங்கியுள்ளது.*

*விரைவில் மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாக உள்ள நிலையில், அதிமுகவை பலப்படுத்துவதற்கான முயற்சிகளில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தீவிரம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், பிற கட்சிகளில் உள்ள நிர்வாகிகள் குறிப்பாக பாஜக நிர்வாகிகள் அதிமுக - பாஜக கூட்டணி முறிவுக்கு பின் அதிமுகவில் ஐக்கியமாகி வருகிறார்கள்.*

*அந்தவகையில், திமுகவின் முன்னாள் பொதுக்குழுஉறுப்பினரும், கோட்டமேட்டுப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான தங்கராஜ் அக்கட்சியில் இருந்து விலகி அண்ணாமலை முன்னிலையில் கடந்த ஆண்டு பாஜகவில் இணைந்தார். அவருக்கு அக்கட்சியின் ஓபிசி பிரிவின் மாநிலச் செயலாளர் பதவி வழங்கப்பட்டிருந்தது.*

*இந்த நிலையில் அண்ணாமலை மீது ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அவர் அந்த கட்சியில் இருந்து விலகி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் தன்னை அக்கட்சியின் அடிப்படை உறுப்பினராக இணைத்துக்கொண்டார். இந்த விவகாரம் தமிழக பாஜகவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*இன்னும் பல பாஜகவின் முக்கிய நிர்வாகிகள் அதிமுகவில் இணைவதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.*

## கிராம சபைக் கூட்டத்தில் கேள்வி கேட்டவரைத் தாக்குவது என்ன மாதிரியான ஜனநாயக நடைமுறை – சீமான் கேள்வி

சென்னை : நவ. 4, "திமுக ஆட்சிக்கு வந்த பிறகு மக்கள் கேட்கும் கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல் கிராமசபைக் கூட்டங்கள் பலமுறை ஒத்திவைக்கப்படுவதும், கேள்வி கேட்பவர்கள் மீது கடுமையாகத் தாக்குதல் தொடுப்பதும் தொடர் கதையாகிவிட்டது. கேள்வி கேட்பதற்காகத்தானே கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது? மக்களின் குரலாக கேள்வி கேட்டவரைத் தாக்குவதென்பது என்ன மாதிரியான ஜனநாயக நடைமுறை?" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "புதுக்கோட்டை மாவட்டம் தொண்டைமான் ஊரணி ஊராட்சியில் கடந்த நவம்பர் 1-ம் தேதி அன்று நடைபெற்ற சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில், ஊராட்சியில் நடைபெறும் ஊழல் முறைகேடுகளுக்கு எதிராக கேள்வி எழுப்பிய நாம் தமிழர் கட்சியின் கிளைச் செயலாளர் விஜயகுமாரை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவரின் மாமனார் சைவம், ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் ஆகியோர் சேர்ந்து கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது. கிராம சபை கூட்டத்துக்கு வந்திருந்த சிறப்பு அலுவலர் முன்னிலையிலேயே நடைபெற்றுள்ள இக்கொடூர தாக்குதல் மக்களாட்சி நடைமுறையையே கேலிக்கூத்தாக்கியுள்ளது.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு மக்கள் கேட்கும் கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல் கிராமசபைக் கூட்டங்கள் பலமுறை ஒத்திவைக்கப்படுவதும், கேள்வி கேட்பவர்கள் மீது கடுமையாகத் தாக்குதல் தொடுப்பதும் தொடர் கதையாகிவிட்டது. கடந்த மாதம் அக்டோர் 2



அன்று விருதுநகர் மாவட்டம் கங்காகுளம் கிராமத்தில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில், ஊராட்சியில் நடைபெறும் ஊழல் குறித்து கேள்வி எழுப்பிய விவசாயி அம்மையப்பரை ஊராட்சி மன்றச் செயலாளர் தங்கபாண்டியன் காலால் எட்டி உதைத்த நிகழ்வு கொடும்நிகழ்வின் வடு மறைவதற்குள் மற்றுமொரு சனநாயக படுகொலை அரங்கேறியுள்ளது.

விஜயகுமாரைத் தாக்கிய ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர், துணைத் தலைவர் உள்ளிட்டோர் கடந்த ஒரு வருட காலமாக பல்வேறு ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தொடர்ந்து புகார் கூறி வரும் நிலையில் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் திமுக அரசு இதுவரை எடுக்காதது ஏன்? மக்களின் சார்பாக நியாயமான கேள்வி எழுப்பிய நாம் தமிழர் கட்சியின் ஊராட்சி மன்றப் பொறுப்பாளர் விஜயகுமாரை தாக்கிய குற்றவாளிகளை இதுவரை கைது செய்யாதது ஏன்? கேள்வி கேட்பதற்காகத்தானே கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது? மக்களின் குரலாக கேள்வி கேட்டவரைத் தாக்குவதென்பது என்ன மாதிரியான ஜனநாயக நடைமுறை?

திமுகவின் திராவிட மாடல் ஆட்சியில் சாதாரண ஊராட்சி மன்ற பெண் தலைவர்களின் கணவர்கள் முதல் அமைச்சர்கள் வரை தங்களின் அதிகார கொடுங்கரங்களால் அப்பாவி பொதுமக்களை அச்சுறுத்தி, மிரட்டி கொலைவெறித் தாக்குதல் நடத்துகிறார்கள் என்றால் திமுக ஆட்சியில் எந்த அளவுக்கு அதிகார அத்துமீறல்கள் உச்சத்தில் உள்ளது என்பதற்கு இந்நிகழ்வுகளே தக்கச் சான்றாகும்.

ஆகவே, திமுக அரசு ஊராட்சியில் நிகழும் ஊழல் முறைகேடுகளுக்கு எதிராக மக்களின் பக்கம் நின்று கேள்வி எழுப்பிய தம்பி விஜயகுமாரை அவமதித்து, கடுமையாக தாக்கிய ஊராட்சி மன்றத் தலைவர் தாமரைச்செல்வியின் கணவர் ராமதாஸ், மாமனார் சைவம், துணைத்தலைவர் ரமேஷ்குமார் ஆகிய அனைவரையும் உடனடியாக கைது செய்து, சட்டப்படி கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டுமென தமிழக அரசினை கேட்டுக்கொள்கிறேன். மேலும், இக்கொடுந்தாக்குதலில் காயமுற்று சிகிச்சை பெற்று வரும் விஜயகுமாருக்கு உரிய மருத்துவமும், இழப்பீடும் வழங்க வேண்டும்" என்று தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

# பள்ளி முடிந்து ஆட்டோவில் வீடு திரும்பிய பள்ளி மாணவிக்கு ஆபாச வார்த்தைகள் பேசி அத்துமீறிய ஆட்டோ ஓட்டுநர் போக்சோவில் கைது

சென்னை,நவ,4

சென்னை இராயபுரம் சேர்ந்த 15 வயதுடைய பள்ளி மாணவி இவர் தண்டையார்பேட்டையில் உள்ள தனியார் பள்ளியில் பணிரெண்டாம் வகுப்பு படித்து வருகிறார். நேற்று முன்தினம் வழக்கம் போல் பள்ளி முடித்து விட்டு வீட்டிற்கு செல்வதற்காக மாணவி தண்டையார்பேட்டையில் இருந்து ஷேர்ஆட்டோவில் ஏரி பயணம் செய்தார்.

அப்போதுபோது பள்ளி மாணவியை பார்த்து ஷேர் ஆட்டோ ஓட்டுநர் தகாத வார்த்தையில்பேசிபாலுணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணவியிடம் தவறாக நடந்து



கொள்ள முற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனால் பயந்து போன பள்ளி மாணவி வண்ணாரப்பேட்டை கல்லறை சாலை வழியாக ஆட்டோ சென்று கொண்டிருந்த பொழுது ஆட்டோவை நிறுத்த சொல்லி கீழே இறங்கி வீட்டிற்கு சென்றுள்ளார். பின்னர் நடந்ததை தனது தாயிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்து தாய் உமா மகேஸ்வரி ராயபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து சென்னை பழைய வண்ணாரப்பேட்டை அம்மையப்பன் தெருவை சேர்ந் 51 வயதான பாஸ்கரனை இராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு பின்னர் போஸ்கோ சட்டத்தின் கீழ் பாஸ்கர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் சிறையில் அடைத்தனர்.

# எரவாஞ்சேரியில் ஐயப்பன் கோவில் மகா கும்பாபிஷேகம்





தரங்கம்பாடி, நவ-04:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவில் ஒன்றியம் எரவாஞ்சேரி கிராமத்தில் ஸ்ரீ தர்மசாஸ்தா என்கிற ஐயப்பன் கோவில் புதிதாக கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் சிவபெருமானின் நான்கு புதல்வர்களில் ஒருவரான தர்மசாஸ்தா எனும் அருள்மிகு ஐயப்ப சுவாமி மனிதர்களின் தர்ம சிந்தனையை அதிகரிக்கும் சக்தியாகவும் மக்கள் செல்வத்தை அருளும் தெய்வமாகவும் அருள வேண்டி மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அடுத்து காவிரியின் கிளை நதியான வீரசோழன் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள 54, எரவாஞ்சேரி கிராமத்தில் ஈஸ்வரனுக்காகவே அமைக்கப்பெற்ற ஈஸ்வரன் குளக்கரையில் வடபாகத்தில் அருள்மிகு விநாயகர், அருள்மிகு முருகனுடன் யோகநிலையில் அமையப்பெற்ற ஸ்ரீ தர்ம சாஸ்தாவிற்கு "ராஜ் குருப்ஸ்"ன் ஏற்பாட்டில் புதிய திருக்கோயில் அமைத்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

முன்னதாக கோவிலில் இரண்டு கால யாக பூஜைகள் நடைபெற்று பூர்ணாகுதியுடன் கடம் புறப்பட்டு கோவிலை வலம் வந்து பின்னர் கோபுரங்கள் கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் விநாயகர் முருகன் தர்மசாஸ்தா ஐயப்பன் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் தீபாராதனை நடைபெற்றது.

திருமருகல் நடராஜ சுந்தர சிவாச்சாரியார் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேகத்தை நடத்தினர். ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து வழிபட்டனர். தொடர்ந்து அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக ஏற்பாடுகளை எரவாஞ்சேரியை சேர்ந்த ராஜ் குரூப்ஸ் குடும்பத்தினர் செய்திருந்தனர். குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில் முதல் முதலாக ஐயப்பன் கோயில் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கோயிலாக திகழ்வது பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே வரவேற்பை பெற்றுள்ளது.

# நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி





சென்னை ,நவ. 4-

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக விசாரித்த நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் அளித்த அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 2018-ல் நடந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக, தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்தது. மனித உரிமை ஆணையத்தின் புலனாய்வுப் பிரிவு அறிக்கை மற்றும் தமிழக அரசின் அறிக்கையின் அடிப்படையில் இந்த வழக்கை முடித்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து மதுரையை சேர்ந்த வழக்கறிஞரும், மனித உரிமை ஆர்வலருமான ஹென்றி திபேன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த மனுவில், தான் அளித்த புகாரின் அடிப்படையில், இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார். கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, தேசிய மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை தமிழக அரசுக்கு வழங்கப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பிய உயர் நீதிமன்றம் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெ.நிஷா பானு, என். மாலா ஆகியோர் அடங்கிய அமர்வில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத் தரப்பில், "உயர் நீதிமன்றத்தில் இருந்து பெற்ற அறிக்கையைத் தவிர, தேசிய மனித உரிமை ஆணையத்திடம் இருந்து அறிக்கை ஏதும் கிடைக்கப் பெறவில்லை" என தெரிவிக்கப்பட்டது.

அப்போது மனுதாரர் ஹென்றி திபேன், "மனித உரிமை ஆணைய சட்டப்படி, அறிக்கையை சம்பந்தப்பட்ட அரசுக்கும், புகார்தாரர்களுக்கும் வழங்க வேண்டும். மேலும், துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த சிபிஐ, தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை காவல் நிலைய ஆய்வாளர் திருமலை என்பவரை மட்டும் வழக்கில் சேர்த்துள்ளது. துப்பாக்கிசூடு குறித்து விசாரித்த நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம், 17 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்துள்ளது. அந்த அறிக்கையை ஏற்று அரசாணை பிறப்பித்த தமிழக அரசு, அதன் அடிப்படையில் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று குற்றம் சாட்டினார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று கேள்வி எழுப்பினர். பின்னர் இது தொடர்பாக தமிழக அரசு விளக்கமளிக்க உத்தரவிட்டு, விசாரணையை நவம்பர் 17-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.



சென்னை காசிமேடு புதுமனை குப்பம் பகுதியில் செயல்பட்டு வரும் சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ளது இப்பள்ளியில் சுமார் 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர் பள்ளியின் சுற்றுச்சுவர், பள்ளி வகுப்பறை, சத்துணவு கூடம், கழிவறை உள்ளிட்டவற்றை சிதிலமடைந்து காணப்படுவதால் இது குறித்து பள்ளி தலைமை ஆசிரியர் ஈஸ்வரி 43 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பவித்ராவிடம் கோரிக்கை வைத்தார் கோரிக்கையை ஏற்று பள்ளியை சீரமைக்க சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து ரூபாய் 55 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பூமி பூஜை நடைபெற்றது ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன், 43 வது வார்டு மாமன்ற"உறுப்பினர் பவித்ரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் காரைக்கால் மாவட்டம் முல்லை நகரில் இயங்கி வரும் பெண்கள் தங்கும் விடுதியை நேற்று மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஆய்வு மேற்கொண்டார். 60 மாணவிகள் தங்கியுள்ள அந்த பெண்கள் விடுதியில் அனைத்து இடங்களையும் பார்வையிட்ட ஆட்சியர் அந்த விடுதியை சுற்றிலும் மழைநீர் தேங்கியிருப்பதை பார்வையிட்டு உடனடியாக பொதுப்பணித்துறை மூலம் நீரை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி ஹாஸ்டல் வார்டன் காஞ்சனாவை கேட்டுக் கொண்டார். மேலும் உள்ளே சென்று அனைத்து இடங்களையும் பார்வையிட்ட ஆட்சியர் மாணவிகளுக்கு சரியான உணவுகளை சரியான நேரத்தில் வழங்க வேண்டும் என்றும் அனைத்து இடங்களையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார். மேலும் அங்கு தங்கியிருக்கும் மாணவிகளிடம் சரியான உணவு வழங்குகிறார்களா என்றும் உணவுகள் தரமாக உள்ளனவா என்றும் கேட்டறிந்தார்.



காரைக்கால் மாவட்டம் திருமலைராயன் பட்டினம் கொம்யூன் ஆற்றங்கரை பேட் கிராமத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான குடிநீர் மேம்பாட்டு பணி மற்றும் நிரவி கொம்யூன் காவேரி நகர் பகுதிகளுக்கு குடிநீர் விரிவாக்க பணிகளுக்கான திட்டங்களுக்கு பூமி பூஜை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் தலைமையில் குடிநீர் குழாய் பதிக்கும் பணியினை தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டங்களுக்கு 5,66,000/= மற்றும் 3.29.000/= மதிப்பீடு செய்யப்பட்டு அரசாணை பெறப்பட்டது. இந்த திட்டத்தினால் ஆற்றங்கரை பேட் கிராமத்தில் சுமார் 250 நபர்கள் மற்றும் காவிரி நகர் பகுதியில் 280 நபர்கள் பயனடைவார்கள். இந்நிகழ்வில் காரைக்கால் பொதுப்பணித்துறை நீர்ப்பாசனம் மற்றும் பொது சுகாதார கோட்ட நிர்வாக பொறியாளர் மகேஷ் பொது சுகாதாரம் உப கோட்டம் உதவி பொறியாளர் அருளரசன் மற்றும் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# வாணியன்சத்திரம் கிராமத்தில் பிரிட்ஜை திறந்த போது மின்சாரம் தாக்கியதில் பெண் பலி

ஊத்துக்கோட்டை, நவ4-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கன்னிகாபுரம் ஊராட்சியைச் சேர்ந்த வாணியன் சத்திரம் கிராமம்,அண்ணா நகர் பகுதியில் வசித்து வந்தவர் வீரம்மாள் (வயது 47) ஆவார்.

குடும்பத்தலைவியான இவர் நேற்று முன்தினம் மதியம் தனது வீட்டில் இருந்த பிரிட்ஜை திறந்தபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் பாய்ந்து அலறி துடித்து மயங்கி கீழே விழுந்தார். உடனடியாக அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு செங்குன்றத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் வழியிலேயே வீரம்மாள் இறந்து விட்டதாக கூறினர்.



இந்த சம்பவம் குறித்து வீரம்மாளின் கணவர் சீனிவாசன் வெங்கல் காவல் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு புகார் செய்தார். எனவே, போலீசார் வீரம்மாள் உடலை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும், வழக்கு பதிவு செய்து இச்சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

### சீர்காழி அருகே நடுகடலில் மீன் பிடித்த போது

# மின்னல் தாக்கி கடலில் தவறி விழுந்து மீனவர் உயிரிழப்பு

சீர்காழி, நவ. 4-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தைச் சேர்ந்தவர் தமிழ்மணி.41 இவரது பைபர் படகில் இவரது தம்பி செல்வமணி.40, மகன் தஷ்விந்த்.20. ஆகிய மூவரும் நேற்று மாலை திருமுல்லைவாசல் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்க சென்றுள்ளனர்.

இரவு முழுவதும்



மீன்பிடித்து கொண்டிருக்கும் போது விடியற்காலையில் மழை பெய்துளள்ளது. அப்போது இடி மின்னல் தாக்கியுள்ளது. இதில் எதிர்பாராத விதமாக தஷ்விந்த் நிலை தடுமாறி கடலில் விழுந்து மாயமாகியுள்ளார்.

இதுகுறித்து மற்ற இருவரும் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்ததை அடுத்து திருமுல்லைவாசல் மீனவர்கள் படகுகளில் கடலுக்குள் சென்று தஷ்விந் உடலை தேடி வருகின்றனர். இச்சம்பவம் மீனவ கிராமத்தில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து குறித்து கடலோர காவல் குழும போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### அச்சிறுப்பாக்கம் அதிமுக தெற்கு ஒன்றிய பூத் கமிட்டி கூட்டத்தில் ரகளை

# ஒன்றிய செயலாளர் மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து தள்ளுமுள்ளு பூத் கமிட்டி பேப்பர்கள் கிழிப்பு

அச்சிறுப்பாக்கம், நவ. 4-

செங்கல்பட்டு மாவட்டம்,மதுராந்தகம்,அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியம் அதிமுக பூத் கமிட்டி கூட்டம் அச்சரப்பாக்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆறுமுகம், மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய செயலாளராக இருந்த அனந்தமங்கலம் சுப்பிரமணியத்தை மாற்றியதற்கு



எதிர்ப்பு தெரிவித்து அவருடைய ஆதரவாளர்கள் ரகளை செய்து கைகலப்பு ஏற்பட்டு பூத் கமிட்டி பேப்பர்கள் கிழித்து எரியப்பட்டது.

இதனால் மூத்த கட்சி நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் ரகளையில் ஈடுபட்ட வர்களுடன் பேச்சு வார்த்தையில் நடத்தினர். இதனால் அந்த இடம் போர்களம் போல் காட்சி அளித்தது. இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது

# ஊத்துக்கோட்டை பேரூர் திமுக சார்பில் பாக முகவர்கள் பி.எல்.ஏ 2 ஆலோசனை கூட்டம்





திருவள்ளூர் , நவ. 4-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி,எல்லாபுரம் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக சார்பில் பாக முகவர்கள் பி.எல்.ஏ 2 ஆலோசனை கூட்டம் ஆத்துப்பாக்கம் கிராமத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன், கட்சியின் செய்தி தொடர்பு துணை தலைவரும்,தொகுதி பொறுப்பாளருமான அரசுகுமார் ஆகியோர் கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர்.

பின்னர், நாளை திருவள்ளூரில் நடைபெறும் பாக முகவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார். இதில்,கலந்து கொள்ளும் பாக முகவர்களுக்கு அடையாள அட்டை,சீருடை உள்ளிட்டவைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பி.ஜே. மூர்த்தி, தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.சத்தியவேலு, ஊத்துக்கோட்டை பேரூர் செயலாளர் அபிராமிகுமரவேல் மற்றும் மாவட்ட,ஒன்றிய,பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பஞ்சமி நிலங்களை மீட்டு பட்டியல் இன மக்களுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும், தமிழக முதல்வருக்கு புரட்சி பாரத கட்சி கோரிக்கை

சீர்காழி, நவ. 4-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் புரட்சி பாரதம் கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் நவீன் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அழைப்பாளராக மாநில முதன்மை செயலாளர் ருசேந்திரகுமார் கலந்து கொண்டு கட்சி வளர்ச்சி குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினர். பின் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது. மயிலாடுதுறை பகுதியில் 1,500 ஏக்கருக்கு மேல் பஞ்சமி நிலங்கள் உள்ளன. இவைகளை மீட்டு அரசு பட்டியல் என மக்களுக்கு பகிர்ந்து வழங்க வேண்டும் எனவும், இந்த மாவட்டத்திற்கு தொழிற்பேட்டை அமைவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தொழிற்பேட்டை அமைக்காமல் ஆளுங்கட்சியினர் பிரித்து விற்பனை செய்வதாகவும்



கூறினார்.

மேலும் சீர்காழி பகுதியில் அரசு ஆங்கில வழி பள்ளி திறக்க வேண்டும் எனவும், மயிலாடுதுறை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மணல் குவாரிகளால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவது இல்லாமல் விவசாயமும் பாதிக்கப்படுகிறது என தெரிவித்தார்.

சீர்காழி தனித் தொகுதியாக இருந்தாலும் ஊராட்சி மன்ற தலைவர்கள் தன்னிச்சையாக செயல்பட முடியவில்லை. பொதுவாக இருந்த ஊராட்சி மன்ற பதவி தற்பொழுது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்படும் பொழுது வெற்றி பெற்ற ஊராட்சி மன்ற தலைவர்களை உயர் சாதிக்காரர்கள் பொறுத்துக் கொள்ள முடியவில்லை எனவும் அவர்களது அமரும் நாற்காலிகளை உடைப்பதுதான் சனாதனம். இந்த சனாதானத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கண்டிக்க மாட்டார்களா என கேள்வி எழுப்பினார்.

திமுக ஆட்சியில் தாழ்த்தப்பட்ட பட்டியல் இன மக்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்களை கூடுதல் கவனத்துடன் தமிழக முதல்வர் கண்காணிக்க வேண்டும் என புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் கோரிக்கை விடுவதாக தெரிவித்தார்.



இலங்கை ,கொழும்பில், நடைபெறவுள்ள “நாம்200“ நிகழ்வு நடைபெற உள்ள நிலையில், இலங்கை சென்றுள்ள இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் திருகோணமலையிலுள்ள திருக்கோணஸ்வரர் ஆலயத்திற்கு சென்று இறை வழிபாடு செய்தார். இந்நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் திருகோணஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்ற விசேஷ பூஜை வழிபாடுகளில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது...

# உணவு பதப்படுத்துதல் துறை 9 ஆண்டுகளில் ரூ.50,000 கோடி அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்துள்ளது – பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, நவ. 4-

இந்திய உணவு பதப்படுத்துதல் துறை கடந்த 9 ஆண்டுகளில் ரூ.50 ஆயிரம் கோடி அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.



உலக உணவு இந்தியாவின் 2-வது மாநாடு புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. 3 நாட்கள் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் நேற்று பிரதமர் மோடி தொடக்க உரை ஆற்றினார். அப்போது அவர், "கடந்த ஒன்பது ஆண்டுகளில், ரூ.50,000 கோடி மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடு, உணவு பதப்படுத்தும் துறைக்கு வந்துள்ளது. இது அரசின் தொழில் மற்றும் விவசாயிகளுக்கு ஆதரவான கொள்கைகளின் விளைவாகும்.

கடந்த 9 ஆண்டுகளில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதி 150% அதிகரித்துள்ளது. உள்நாட்டு பதப்படுத்தும் திறன் கணிசமாக அதிகரித்துள்ளது. இந்தியாவின் உணவுப் பன்முகத்தன்மை ஒவ்வொரு உலக முதலீட்டாளருக்கும் மிகப் பெரிய வாய்ப்பு. நமது உணவுக் கலாச்சாரம் ஆயிரக்கணக்கான வருட பயணத்தின் விளைவு. உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல, மன ஆரோக்கியத்துக்கும் உணவு மிகப் பெரிய காரணி. சமச்சீரான உணவு, ஆரோக்கியமான உணவு, பருவத்துக்கு ஏற்ற உணவு ஆகியவை குறித்து ஆயுர்வேதம் பேசுகிறது என குறிப்பிட்டார்.

முன்னதாக, ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுய உதவி குழுக்களுக்கு ரூ. 380 கோடி நிதியை பிரதமர் மோடி வழங்கினார். மேலும், 'உலக உணவு இந்தியா 2023'-ன் ஒரு பகுதியாக 'உணவு தெருவை பிரதமர் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வு, இந்தியாவை 'உலகின் உணவுக் கூடை'யாகக் காட்டுவதையும், 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாகக் கொண்டாடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. முதல் மாநாடு கடந்த 2017 ம் ஆண்டு நடைபெற்றது. கரோனா தொற்று காரணமாக அடுத்தடுத்த ஆண்டுகளில் நடைபெறவில்லை. நேற்று தொடங்கி உள்ள இந்த மாநாடு 3 நாட்களுக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 3 நாள் மாநாட்டில், முக்கிய உணவு பதப்படுத்தும் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் உள்பட 80 நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள்பங்கேற்பாளர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்த மாநாட்டின் மூலம், உணவு பதப்படுத்தும் துறை ₹75,000 கோடிக்கும் அதிகமான முதலீட்டை ஈர்க்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உளுந்தூர்பேட்டையில் பெண் கல்வி குறித்து மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி




கள்ளக்குறிச்சி,நவ,04_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பெண் கல்வி மற்றும் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி ஊர்வலம் நடைபெற்றது.

இப்பேரணி தலைமை ஆசிரியர்வனிதா தலைமையில், பள்ளியின் இருபால் ஆசிரியர்கள் முன்னிலையில், மாணவர்கள் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வியை கற்பிப்போம் உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியபடியும், பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாசகங்களை கூறியும் முக்கிய சாலைகள் வழியாக பேரணி ஊர்வலம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உதவி தலைமையாசிரியர் மோகன்ராம், முதுகலை ஆசிரியர்கள், பிரேமா, பாண்டியன், ராஜவேல், கோபால்பட்டதாரி ஆசிரியர்கள்கோவிந்தராஜ், சாந்தி, ரிஹானாபானு, கந்தசாமி, உடற்கல்வி ஆசிரியர் சிவ.ஈஸ்வரன் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி தியாகிகள் மாதாந்திர உதவித் தொகையை ரூ.12000–ஆக உயர்த்த ஆளுநர் தமிழிசை ஒப்புதல்

புதுச்சேரி, நவ. 4-

புதுச்சேரி விடுதலைப் போராட்ட தியாகிகளின் மாதாந்திர உதவித் தொகை ரூ. 10,000-இல் இருந்து ரூ. 12.000-ஆக உயர்த்தி வழங்க துணை நிலை ஆளுநர் தமிழிசை ஒப்புதல் வழங்கியுள்ளார்.



கடந்த ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி நடைபெற்ற புதுச்சேரி சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது முதல்வர் ரங்கசாமி உறுதியளித்து இருந்ததை அடுத்து, புதுச்சேரி மாநில விடுதலைப் போராட்ட தியாகிகளின் மாதாந்திர உதவித் தொகை ரூ.10,000 இல் இருந்து ரூ.12.000 ஆக உயர்த்தி வழங்க துணை நிலை ஆளுநர் தமிழிசை ஒப்புதல் அளித்துள்ளார். இந்த உயர்வு 01.11.2023 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன்மூலம் புதுச்சேரியில் 939, காரைக்கால் பகுதியில் 174, மாஹே பகுதியில் 87, ஏனாம் பகுதியில் ஒன்று என மொத்தம் 1201 விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்பங்கள் பயன்பெறும். மாதாந்திர உதவித் தொகை உயர்த்தப்படுவது தொடர்பாக புதுச்சேரி மாநில விடுதலைப் போராட்ட தியாகிகள் மாதாந்திர உதவித் தொகை விதிகள்,1970-ல் திருத்தம் மேற்கொள்ளவும் ஒப்புதல் அளித்துள்ளார்.

புதுச்சேரி அரசின் தொழில் மற்றும் வணிகத் துறை மூலமாக புதுச்சேரி மாநிலத்துக்கான புதிய போக்குவரத்துக் கொள்கை - 2023 வெளியிடுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். புதுச்சேரி மாநில அமைச்சரவையின் ஒப்புதலோடு உருவாக்கப்பட்ட இந்த கொள்கை, "புதுச்சேரி ஒருங்கிணைந்த போக்குவரத்து உள் கட்டமைப்பு, பல்முனை போக்குவரத்துப் பூங்கா மற்றும் பணிமனைக் கொள்கை 2023" என்று அழைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரியலூரில் மாவட்ட ஊராட்சி குழு கூட்டம்

அரியலூர்,நவ.4-

அரியலூர் மாவட்ட ஊராட்சி குழு கூட்டம் நடைபெற்றது. அரியலூர் மாவட்ட ஊராட்சி குழு கூட்ட மன்றத்தில் நடைபெற்ற மாவட்ட கவுன்சில் கூட்டத்துக்கு, அதன் தலைவர் பொ.சந்திரசேகர் தலைமை வகித்தார், மாவட்ட ஊராட்சி செயலாளர் சிவக்குமார் முன்னிலை வகித்தார், துணைத்தலைவர் எஸ். அசோகன் வரவேற்று பேசினார், ராமராஜன் தீர்மானங்களை படித்தார்.



பல்வேறு நிர்வாக செலவினங்கள் உட்பட, பத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அன்பழகன் (அதிமுக) பேசியதாவது:

அரியலூர் அருகே ரெட்டிபாளையம், பிர்லா சிமெண்ட் ஆலை நிர்வாகம், அடைத்து வைத்துள்ள வடிகால் வரத்து வாரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சிமெண்ட் ஆலை புதிய சுரங்கங்களுக்கான கருத்து கேட்பு கூட்டம் என்பது சரியாக நடத்தப்படவில்லை. மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் இதில் முறையாக செயல்படவில்லை. சிமெண்ட் ஆலைகளுக்கு நிலம் எடுப்பதில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் முறையாக வழங்கிவிட்டு, அதன் பிறகு கருத்துகேட்புகூட்டத்தைநடத்த வேண்டும். பொதுமக்களிடம் வன்முறையை தூண்டி விட வேண்டும் என்கிற நோக்கத்தில், அரியலூர் மாவட்டத்தில் சில அரசு அதிகாரிகள் செயல்படுகின்றனர். இதனை தவிர்க்க வேண்டும் என பேசினார்.

பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் வசந்தமணி பேசும்போது, தமிழகம் முழுவதும் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதற்கு இந்த அரியலூர் மாவட்ட ஊராட்சி குழு பரிந்துரை செய்ய வேண்டும் என கூறினார்.

அதைத்தொடர்ந்து, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை, மாவட்ட சுரங்க துறை உதவி இயக்குனர் அலுவலகம், ஊராட்சிகளின் உதவிஇயக்குனர் அலுவலகம், கால்நடை பராமரிப்புத்துறை, மாவட்ட தொழில் மையம், வேளாண்மை துறை, நெடுஞ்சாலைத்துறை, பொது சுகாதாரத்துறை, மாற்று திறனாளிகள் நலத்துறை, உள்ளிட்ட துறைகள் சார்பில், அவற்றின் அலுவலர்கள் பலரும், தமது துறைகள் சார்பில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்து விளக்கி பேசினர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அம்பிகா, ராமச்சந்திரன், நல்லமுத்து, குலக்கொடி, வசந்த மணி, சகிலா தேவி, ராஜேந்திரன், அன்பழகன், தனச்செல்வி, கீதா, மற்றும் அரியலூர், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்பட, பலர் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட ஊராட்சி குழு அலுவலக நிர்வாகி ரமேஷ் நன்றி கூறினார்.




தமிழக பத்திரிகையாளர் சங்கம் உதகையில் பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் முதல் மாநில மாநாடு நடைபெற்றது. இதில் சோளங் குருணையில் உள்ள டீக்கடை மாயாண்டி கோனார் எம். ரவிச்சந்திரன்க்கு தன்னலமின்றி சிறப்பாக பணியாற்றி, சோளங்கூர்ணி கிராமத்தில் மண்வளத்தை மலட்டு தன்மை அடையச் செய்யும் பிளாஸ்டிக், பிளாஸ்டிக்கு பைகள், கேரிபேக் ஆகியவைகள் இல்லாத கிராமமாக மாற்றி வருகிறார். இவரை பாராட்டி சமூக சேவகர் பட்டத்தை தலைவர் ஏ.பி. ஹரிஹரன், சிறப்பு விருந்தினர் நீதி அரசர் ராம பார்த்திபன், எம். ரவிச்சந்திரனுக்கு விருது வழங்கி பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. உடன் மாநில பொதுச் செயலாளர் ஏ. பாஷா, தென்மண்டல தலைவர் கே.எஸ். பாலகிருஷ்ணன், மதுரை மண்டல தலைவர் பி. சண்முகம் ஆகியோர் உள்ளனர்.

# ஒலியமங்கலத்தில் மழைக்கால சிறப்பு காய்ச்சல் மருத்துவ முகாம்



பொன்னமராவதி, நவ. 4-

பொன்னமராவதி அருகே ஒலியமங்கலத்தில் காய்ச்சல் மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் ஆணையின்படி, காரையூர் வட்டார மருத்துவ அலுவலர் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி தாலுகா மேலத்தானியம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட ஒலியமங்கலம் சந்தைப்பேட்டை மற்றும் வெள்ளாளப்பட்டி பகுதிகளில் சிறப்பு காய்ச்சல் மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் பொது மக்களுக்கு சிகிச்சை மருத்துவ ஆலோசனை மற்றும் நில வேம்பு குடிநீர் வழங்கப்பட்டது. இதில் சுகாதார ஆய்வாளர் கண்ணன், செவிலியர், பெண்கள் சுகாதார தன்னார்வ தொண்டர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வடக்கு பனவடலிசத்திரத்தில் பகுதி நேர நியாய விலைக்கடை திறக்கும் நிகழ்ச்சி: எம்எல்ஏ ராஜா பங்கேற்பு

சங்கரன்கோவில், நவ.4-

மேலநீலிதநல்லூர் ஒன்றியம் வடக்குபனவடலி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக்கடை திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரியதுரை தலைமை வகித்தார்.



ஊராட்சி மன்றத் தலைவர் முத்துலட்சுமி ஏசுதாஸ் கூட்டுறவு சங்க தனி அலுவலர் செல்வகணேஷ் மற்றும் சுரேஷ் பணவடலிசத்திரம் கூட்டுறவு சங்கச் செயலாளர் செந்தூர்பாண்டியன் திமுக கிளை கழக செயலாளர் நவமணி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக், மதிமுக ஒன்றிய திமுக செயலாளர் சுபாஷ் சந்திர போஸ் ஒன்றிய கவுன்சிலர் சுஜிதா பாஸ்டர், ஜோதிமுத்து, ஜெயக்குமார், கேபிள் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு பகுதிநேர நியாய விலைக்கடையை திறந்து வைத்து விற்பனையை துவக்கி வைத்தார்.

இதில் மாவட்டப் பொருளாளர் சரவணன், ஒன்றிய திமுக அவைத் தலைவர் பரமையா, துணைச் செயலாளர் சின்னக்குருசாமி, மாவட்ட பிரதிநிதி சண்முகப்பாண்டியன் மாவட்ட விவசாய அணி முத்துப்பாண்டியன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முருகன், பொறியாளர் அணி மனோஜ்குமார், வர்த்தக அணி கார்த்திக், கிளைக் திமுக செயலாளர்கள் முத்துராமலிங்கம், நாகராஜன், சுபாஷ் சந்திரபோஸ், மணி, சாலை பணியாளர் காசிபாண்டியன், சுசீந்திரன், செல்வராஜ், ஆசிரியர் முத்துப்பாண்டியன், மகளிர் அணி துணை அமைப்பாளர் ஞானபுஷ்பம், ஒன்றிய ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் சுப்பிரமணியன், கொம்பையா, சரவணக்குமார், ராமையா, பொன்னுச்சாமி, மணிகண்டன், அண்ணாத்துரை, பிரபு, ஒப்பந்ததாரர் காளிமுத்து, தங்கப்பாண்டியன், ஆசிரியர் சாமியா, ராசா, வெளியப்பன், கருப்பசாமி, ஜலால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதல் ஒருவர் பலி

*கள்ளக்குறிச்சி, நவ,04_*

*கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்து எலவனாசூர்கோட்டை அருகே சேலம் செல்லும் புறவழிச் சாலையில் எதிர்பாராத விதமாக இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.*



*இத்தகவலறிந்த இலவசம் கோட்டை காவல் நிலைய காவல்துறையினர் மற்றும் உளுந்தூர்பேட்டை தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்தவரின் உடலை மீட்டு உடற்கூறு ஆய்விற்காககள்ளக்குறிச்சி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், மேலும் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக உளுந்தூர்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.*

*இவ்விபத்து குறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணைமேற்கொண்ட பொழுது , உயிரிழந்தவர் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கைலாசபாளையம், பக்தவச்சலம்நகரைசேர்ந்த செங்கோடான் மகன் ஆறுமுகம்( 67), என்பது தெரியவந்துள்ளது.மேலும் இதே மாவட்டத்தைச் சேர்ந்த மலையடிகுட்டை பகுதியை சேர்ந்த முருகானந்தன் மகன் கார்த்திகேயன் (30), கள்ளக்குறிச்சி மாவட்டம் எடுத்தவாய்நத்தம் பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் மகன் ஞானமூர்த்தி (37), ஞானமூர்த்தி மனைவி மகேஸ்வரி (33), ஆகியோர் பலத்த காயம் அடைந்துள்ளதும் விசாரணையில் தெரியவந்தது.*

# தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்கும் திட்டத்தை கைவிடாவிட்டால் போராட்டம் : அன்புமணி எச்சரிக்கை

சென்னை : நவ. 4, 1703 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிடவில்லை என்றால் பல்லாயிரக் கணக்கான உழவர்களைத் திரட்டி மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:“சென்னையை அடுத்த திருவள்ளூர், ஊத்துக்கோட்டை வட்டங்களில் தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்க 1146 ஏக்கர் விளைநிலங்கள் உட்பட மொத்தம் 1703 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு முடிவு செய்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்ப்பதற்காக முப்போகம் விளையும் நிலங்களை பறிக்க தமிழக அரசு துணை போவது கண்டிக்கத்தக்கது; ஏற்க முடியாதது. தமிழக அரசின் 2022-23ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், தமிழகத்துல் உலகளாவிய பங்களிப்புடன் அறிவு நகரம் உருவாக்கப்படும்; அதில் உலகின் புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் கிளைகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை பாமக-வும் வரவேற்றது. ஆனால், இந்தத் திட்டத்தை அரசு நிலங்களில் செயல்படுத்துவதற்கு பதிலாக சென்னைக்கு அருகில் விளை நிலங்களில் செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. அதற்காக ஊத்துகோட்டை வட்டத்திலுள்ள கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல்மாளிகைப்பட்டு, செங்கத்தாக்குளம், எர்ணாங்குப்பம், திருவள்ளூர் வட்டத்திலுள்ள வெங்கல் ஆகிய கிராமங்களிலிருந்து 1703 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இவற்றில் அரசு புறம் போக்கு நிலங்கள் 556 ஏக்கர் தவிர மீதமுள்ள 1146 ஏக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் ஆகும். அவற்றை உழவர்களிடமிருந்து பறிக்க முயல்வதை நியாயப்படுத்த முடியாது. தமிழ்நாடு அறிவு நகரம் திட்டத்திற்காக கையகப்படுத்தப்படவுள்ள நிலங்கள் ஆரணி ஆற்றங்கரையில் அமைந்திருப்பவை.

மூன்று போகங்களும் சிறப்பாக விளையக் கூடியவை. அந்த நிலங்கள் தான் பல்லாயிரம் உழவர்களுக்கும், உழவுத் தொழிலாளர்களுக்கும் வாழ்வாதாரமாக திகழ்கின்றன. தங்களின் கவுரவமான வாழ்க்கைக்கு வகை செய்யும் நிலங்களை உழவர்கள் கடவுளாக பார்க்கின்றனர். அந்த நிலத்தை பறிக்க அரசு முயல்வதை உழவர்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள்.

அதுவும் கையகப்படுத்தப்படவுள்ள 1146 ஏக்கர் நிலங்களுக்கு விலையாக ரூ.174.52 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது ஓர் ஏக்கருக்கு சராசரியாக ரூ.15 லட்சம் மட்டுமே வழங்கப்படும். ஓர் ஏக்கர் நிலத்தில் ஓராண்டுக்கு ரூ.10 லட்சம் வரை வருவாய் ஈட்டித் தரும் நிலங்களுக்கு ஒட்டுமொத்தமாகவே ரூ.15 லட்சம் விலை வழங்குவதென்பது உழவர்களையும், அவர்களின் உடமைகளையும் சுரண்டும் செயலாகும்.



இதற்கு அரசு துணை போகக் கூடாது. தமிழ்நாடு அறிவு நகரம் அமைப்பதையோ, அங்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் வளாகங்களை ஏற்படுத்துவதையோ பாமக ஒரு போதும் எதிர்க்கவில்லை. தமிழகத்தின் உயர்கல்வி வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அவை தேவை என்பதில் பாமக உறுதியாக உள்ளது. ஆனால், வேளாண் விளை நிலங்களை அழித்துவிட்டுதான் அவற்றை அமைக்க வேண்டும் என்பதை ஏற்க முடியாது.

தமிழக அரசு நினைத்தால், தென் மாவட்டங்களில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மதுரைக்கு அருகில் உள்ள அரசு நிலங்களில் அறிவு நகரத்தை அமைக்கலாம். கொங்கு மண்டலத்திலும் இத்தகைய அறிவு நகரத்தை அமைக்கும் அளவுக்கு நிலங்கள் உள்ளன. சேலத்தில் நகரத்திற்குட்பட்ட பகுதிகளில் சேலம் இரும்பாலைக்கு சொந்தமான 4000 ஏக்கர் நிலம் உள்ளது.

அங்கு தமிழ்நாடு அறிவு நகரத்தை அமைக்கவும் தடையில்லை. இவ்வளவு வாய்ப்புகளையும் ஒதுக்கிவிட்டு, சென்னைக்கு அருகில் வேளாண் விளை நிலங்களை கையகப்படுத்தி தான் அறிவு நகரம் அமைக்கப்படும் என அரசு கூறுவதை ஏற்க முடியாது. அதையும் கடந்து வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் வளாகங்களை அமைக்க 1703 ஏக்கர் நிலம் தேவையில்லை.

கையகப்படுத்தப் படவுள்ள நிலங்களில் நான்கில் ஒரு பங்கு பரப்பளவில் வெளிநாட்டு பல்கலை கழகங்களின் வளாகங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு மீதமுள்ள நிலங்கள் அனைத்தும், தமிழ்நாடு அறிவு நகரத்தை அமைக்கும் நிறுவனத்தால், நில வணிகம் செய்யப்படும் என்பது தான் உண்மை. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கடந்த காலங்களில் பல்வேறு பெயர்களில் நகரங்கள் அமைக்கப்பட்ட போது இது தான் நடந்திருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

இப்படியாக, சில நிறுவனங்கள் நில வணிகம் செய்து கோடிக் கணக்கில் லாபம் பார்க்க வேண்டும் என்பதற்காக பல தலைமுறைகளாக வேளாண்மை செய்து வந்த நிலங்களை உழவர்களிடமிருந்து பறிப்பது நியாயமற்றதாகும். அதற்கு மாறாக, எங்கெல்லாம் அரசுக்கு சொந்தமான நிலங்கள் உள்ளனவோ? அங்கெல்லாம் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளை வளாகங்களை தமிழக அரசு அமைப்பது தான் சரியானதாக இருக்கும். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பது உள்ளிட்ட திட்டங்களுக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. அனைத்துத் தேவைகளுக்காகவும் கையகப்படுத்தப்படும் இடங்களில் பெரும்பாலானவை வேளாண் விளை நிலங்கள் ஆகும்.

தொழில் துறை, கல்வித் துறை, விளையாட்டுத் துறை, உட்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளுக்காகவும் வேளாண்விளை நிலங்கள் கையகப்படுத்தப் பட்டால், வேளாண் தொழிலும், உணவுப் பாதுகாப்பும் என்னவாகும்? என்பதை உணராமலேயே கண்மூடித்தனமாக விளை நிலங்களை கையகப்படுத்த அரசு துடிப்பது நியாயமல்ல.

இந்தப் போக்கை அரசு கைவிட வேண்டும். திருவள்ளூர் மாவட்டம் கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல் மாளிகைப்பட்டு, செங்கத்தாக்குளம், எர்ணாங்குப்பம், வெங்கல் ஆகிய ஊர்களில் 1703 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி தமிழ்நாடு அறிவு நகரம் அமைக்கும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும். அப்பகுதிகளில் ஒரு கைப்பிடி மண்ணைக் கூட கையகப்படுத்தக் கூடாது.

அதற்கு மாறாக, நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு முயன்றால், அதை எதிர்த்தும், கண்டித்தும் பல்லாயிரக் கணக்கான உழவர்களைத் திரட்டி பாமக சார்பில் மாபெரும் மக்கள் திரள் போராட்டத்தை நானே தலைமையேற்று நடத்துவேன் என்று தமிழ்நாடு அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன்.” என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## "மன்னிப்பீர், இது அரசியல் அல்ல"

# பரிசுத் தொகையை பாலஸ்தீன மக்களுக்கு கண்ணீர் மல்க அறிவித்த டென்னிஸ் வீராங்கனை



**கான்கன் (மெக்சிகோ): நவ. 4,**

**உலகின் 7-ம் நிலையில் உள்ள துனீசிய டென்னிஸ் வீராங்கனை ஒன்ஸ் ஜாபெர் மகளிர் டென்னிஸ் சங்கத்தின் கான்கன் இறுதிப்போட்டியில் வென்ற நிலையில், அந்தப் பரிசுத் தொகையின் ஒரு பகுதியை பாலஸ்தீன மக்களுக்கு உதவுவதற்காக வழங்குவதாக கண்ணீர் மல்க அறிவித்துள்ளார்.**

மார்கேட்டா வோன்ட்ரோசோவாவை நேர் செட்டுகளில் தோற்கடித்து அவர், உணர்ச்சிப் பொங்க பேசுகையில், "இந்த வெற்றி எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால். உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், நிஜமாக நான் மகிழ்ச்சியாக இல்லை. இந்த உலகத்தின் தற்போதைய நிலைமை எனக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை" என்றவர் உடைந்து கண்ணீர் உதிர்த்தார்.

பின்னர் தன்னைத் தேற்றிக்கொண்ட ஜாபெர், காசா போர் பற்றி பேசத் தொடங்கினார். அவர் கூறுகையில், "பச்சிளம் குழந்தைகள், சிறுவர்கள் தினமும் மரணமடைவதைப் பார்ப்பது மிகவும் வேதனையாகவும் இதயத்தை நொறுக்குவதாகவும் இருக்கிறது. அதனால், எனது பரிசுத் தொகையின் ஒரு பகுதியை நான் பாலஸ்தீனியர்களின் உதவிக்காக வழங்க முடிவு செய்துள்ளேன். நடக்கும் சம்பவங்களுக்கு மத்தியில் என்னால் இந்த வெற்றியால் மகிழ்ச்சியடைய முடியவில்லை.

மன்னித்துவிடுங்கள் நண்பர்களே, எனக்குத் தெரியும், இப்போது டென்னிஸ் பற்றிதான் பேச வேண்டும். ஆனால், தினந்தோறும் இதுபோன்ற வீடியோக்களைப் பார்ப்பது கொந்தளிப்பை ஏற்படுத்துகிறது. மன்னித்துவிடுங்கள். இது அரசியல் பற்றிய செய்தி இல்லை. மனிதாபிமானம் பற்றியது. நான் உலக அமைதியை விரும்புகிறேன். அவ்வளவுதான்.

நான் முடிந்தவரையில் சமூக ஊடகங்களில் இருந்து விலகியே இருக்க முயற்சிக்கிறேன். ஆனால், அது மிகவும் கடினமாக இருக்கிறது. தினமும் நீங்கள் அந்த பயங்கரமான, மோசமான வீடியோக்கள், புகைப்படங்களையே கடந்து செல்ல வேண்டி இருக்கிறது. அதனால், என்னால் தூங்க முடியவில்லை. என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை. இதில் மோசமான விஷயம் என்னவென்றால், நான் நம்பிக்கையற்றவளாக உணர்கிறேன். என்னால் எதுவுமே செய்ய முடியவில்லையே என நான் நினைக்கிறேன். எனக்கு ஒரு மந்திரக் கரம் இருந்து இவை எல்லாவற்றையும் நான் முடிவுக்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆனாலும், இது மிகவும் வெறுப்படையச் செய்கிறது. இப்போது அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு இந்த சிறிய அளவிலான பணம் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆனால் பணம் எதையும் செய்துவிடாது என்பது எனக்குத் தெரியும். அதனால், அனைவருக்கும் விடுதலை வேண்டும், உண்மையில் அனைவருக்கும் அமைதி வேண்டும் என்று நான் விருப்புகிறேன்" என்று அவர் கூறினார்.

# எனக்கு ஷார்ட் பால் ஆடத் தெரியாது எனக் கூறுகிறீர்களா

## ஸ்ரேயஸ் ஐயர் ஆவேசம்





**மும்பை : நவ. 4,**

**"எனக்கு ஷார்ட் பால் ஆடத் தெரியாது எனக் கூறுகிறீர்களா?" என்று பத்திரிகையாளர் சந்திப்பில் இந்திய அணி வீரர் ஸ்ரேயஸ் ஐயர் ஆவேசமாக பேசினார்.**

இலங்கைக்கு எதிரான போட்டிக்குப் பின்பான பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட ஸ்ரேயஸ் ஐயரிடம் பத்திரிகையாளர் ஒருவர் ஷார்ட் பால் குறித்து கேள்வி எழுப்பினார். அதில், "இந்த உலகக் கோப்பையில் ஷார்ட் பிட்ச் பந்துகள் உங்களுக்கு பிரச்சினையாக இருந்துள்ளது. ஆனால், இன்று சிறப்பாக புல் ஷாட் அடித்தீர்கள். தென் ஆப்பிரிக்கா போட்டிக்கு எப்படி தயாராகியிருக்கிறீர்கள். அந்த அணியினர் ஷார்ட் பிட்ச் பந்துகளை சிறப்பாகவும் அதிகமாகவும் வீசுவார்களே?" என்று பத்திரிகையாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்வியை கேட்டவுடன் அதிருப்தியை வெளிப்படுத்திய ஸ்ரேயஸ் ஐயர், "நீங்கள் ஷார்ட் பால் எனக்கு பிரச்சினை எனச் சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்றார்.

பதிலுக்கு, "பிரச்சினை என்கிற ரீதியில் சொல்லவில்லை. இந்தத் தொடரில் அந்த வகையான பந்துவீச்சு உங்களை தொந்தரவு செய்துள்ளதே. அதைத்தான் கேட்டேன்" என அந்த பத்திரிகையாளர் மீண்டும் கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்விக்கு நீண்ட விளக்கம் கொடுத்தார் ஸ்ரேயஸ். அந்த விளக்கத்தில், "ஷார்ட் பால்கள் என்னை தடுமாற செய்கிறதா, இலங்கைக்கு எதிரான போட்டியில் நான் அடித்த புல் ஷாட்டை பார்த்தீர்களா? குறிப்பாக ஒரு பவுண்டரி அடித்தேன், அதை கவனித்தீர்களா? ஒரு பந்தை எதிர்கொள்ளும்போது, அதை அடிக்க முயலும்போது, அதில் விக்கெட்டாகவும் வாய்ப்பு இருக்கிறது. அது ஷார்ட் பால் அல்லது புல் லெந்த் என எந்த மாதிரியான பந்துவீச்சானாலும் சரி.

இன்ஸ்விங்கரில் இரண்டு மூன்று முறை போல்டானால், உடனே எனக்கு இன்ஸ்விங்கே ஆடத் தெரியாது எனக் கூறுவீர்கள். களத்தில் விளையாடும் வீரர்களாகிய நாங்கள் எந்த மாதிரியான பந்திலும் அவுட் ஆகலாம். ஆனால், வெளியில் இருக்கும் நீங்கள் வீரர்களை பற்றி இந்த மாதிரியான கற்பிதங்களை உருவாக்குகிறீர்கள். மும்பையில் இருந்து கிரிக்கெட் விளையாட்டுக்குள் வந்தவன் நான். வான்கடே மைதானத்தில் அதிகமாக விளையாடியிருக்கிறேன்.

மற்ற மைதானங்களை விட, வான்கடே அதிகமாக பவுன்ஸ் வகை பந்துகளுக்கு ஒத்துழைக்கும். இந்த மைதானத்தில் அதிகம் விளையாடியவன் என்ற முறையில், ஷார்ட் பிட்ச் பந்துகளை எப்படி ஆட வேண்டும் என்பது எனக்கு தெரியும். பொதுவாக ஒரு ஷாட்டை ஆட முற்படும்போது சில சமயங்களில் அது சரியாக அமையலாம். சில சமயங்களில் அப்படி அமையாமலும் போகலாம். ஒருவேளை நான் பல சமயங்களில் ஷார்ட் பிட்ச் பந்துகளை விளையாடும்போது அது சரியாக அமையவில்லை என்பதால் எனக்கு அதில் பிரச்சினை இருப்பதாக உங்களுக்கு தோன்றியிருக்கலாம். ஆனால், ஷார்ட் பிட்ச் பந்துகளை எதிர்கொள்வதில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. இது என் மனதுக்கு தெரியும்" எனக் கோபமாக பதிலளித்தார் ஸ்ரேயாஸ் ஐயர்.

# இந்திய அணிக்கு மட்டும் சிறப்பு பந்து முன்னாள் பாகிஸ்தான் வீரரின் விசித்திர கருத்து



**பாகிஸ்தான் : நவ. 4,**

**நடப்பு உலகக் கோப்பை தொடரில் மற்ற எந்த அணி பந்து வீச்சாளர்களைவிடவும், இந்திய பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். அதிலும் பும்ரா, முகமது ஷமி, சிராஜ், குல்தீப் என அனைவரும் விக்கெட்டுகளை வீழ்த்தி, எதிர் அணியினரை திணறடித்து வருகின்றனர்.**

அதிலும் இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்திய வீரர்களின் பந்து வீச்சை தாக்கு பிடிக்க முடியாத இலங்கை அணி 55 ரன்னில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது.

இந்நிலையில், பாகிஸ்தான் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு அந்நாட்டு முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹசன் ராசா விசித்திரமான கருத்து ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது ஐசிசி, பிசிசிஐ இணைந்து இந்திய வீரர்களுக்கு சிறப்பு பந்துகளை வழங்குவதாகவும், அதன் காரணமாகவே இந்திய பந்து வீச்சாளர்களால் சிறப்பாக பந்துவீச முடிவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மற்ற வீரர்களைக் காட்டிலும் சிறப்பான ஸ்விங் மற்றும் சீம் ஆவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஒரு கட்டத்தில் அவர், இந்திய வீரர்களுக்கு வழங்கப்படும் பந்தை ஒருமுறை சோதனை செய்ய வேண்டும். ஏனெனில் டேப் சுற்றப்பட்ட பந்து கூட அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என்றார். இந்த கருத்துக்களை வைத்து கிரிக்கெட் ரசிகர்களும், பல கிரிக்கெட் விமர்சகர்களும் ஹசன் ராசாவை கலாய்த்து வருகின்றனர்.

# பெண்கள் ஆசிய சாம்பியன்ஸ் ஆக்கி 5-வது வெற்றியை பெற்ற இந்தியா



**ராஞ்சி : நவ. 4,**

**தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 5-0 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தியது.**

பெண்களுக்கான 7-வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனது கடைசி லீக்கில் தென்கொரியாவை எதிர்கொண்டது. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 5-0 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தியது. இந்திய அணியின் சார்பில் சலிமா (2 கோல்) நவ்னீத் கவுர், வந்தனா, நேஹா ஆகியோர் கோல் அடித்தனர்.

லீக் சுற்று முடிவில் புள்ளி பட்டியலில் டாப்-4 இடங்களை பிடித்த இந்தியா (15 புள்ளி), சீனா (12 புள்ளி), நடப்பு சாம்பியன் ஜப்பான் (9 புள்ளி), தென்கொரியா (7 புள்ளி) ஆகிய அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறின.

இந்திய அணி அரைஇறுதியில் தென்கொரியாவுடன் இன்று மீண்டும் மோதுகிறது. மற்றொரு அரைஇறுதியில் சீனா- ஜப்பான் அணிகள் சந்திக்கின்றன.

# எங்களது அடுத்த இலக்கு இறுதி போட்டி தான் : கேப்டன் ரோகித்சர்மா பேட்டி



**மும்பை : நவ. 4,**

**உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் மும்பையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த 33வது லீக் போட்டியில் இந்தியா-இலங்கை மோதின. முதலில் பேட் செய்த இந்தியா 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 357 ரன் குவித்தது. பின்னர் களம் இறங்கிய இலங்கை 19.4ஓவரில் 55 ரன்னுக்கு சுருண்டது. இதனால் 302 ரன் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது. 5 விக்கெட் அள்ளிய முகமது ஷமி ஆட்டநாயகன் விருது பெற்றார்.**

தொடர்ச்சியாக 7வது போட்டியில் வென்ற இந்தியா முதல் அணியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றது. வெற்றிக்கு பின் கேப்டன் ரோகித்சர்மா கூறியதாவது: "உலகக் கோப்பை தொடர் எங்களுக்கு சென்னையில் தொடங்கியது. அரையிறுதிக்கு தகுதி பெற வேண்டும் என்பதே எங்களது முதல் இலக்காக இருந்தது. அது இப்போது நிறைவேறியுள்ளது. மிகுந்த மகிழ்ச்சி. இந்த ஏழு போட்டிகளையும் நாங்கள் அணுகிய விதம் அபாரமாக இருந்தது.

இந்த வெற்றியில் அனைவரது பங்கும் அடங்கியுள்ளது. ஒவ்வொருவரும் அவர்களது பொறுப்பை உணர்ந்து விளையாடி உள்ளனர். எங்களது அடுத்த இலக்கு இறுதிப் போட்டிதான். இந்த போட்டியை பொருத்தவரை முதலில் பேட்டிங் செய்து பெரிய ரன்களை குவித்து விட்டால் நிச்சயம் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. எந்த ஒரு மைதானத்திலுமே 350 ரன் அடித்தால் அது வெற்றிக்கான ரன்களாக இருக்கும். இந்த போட்டியில் ஸ்ரேயாஸ் மிகவும் தெளிவாக விளையாடினார். அவரை நான் நீண்ட நாட்களாகவே பார்த்து வருகிறேன் அவர் இது போன்ற பெரிய இன்னிங்சை விளையாடக்கூடியவர் தான். அதே போன்று பந்துவீச்சில் சிராஜ் ஒரு குவாலிட்டியான பவுலர்.

அவரிடம் புது பந்தை தந்து இதே போன்று சிறப்பாக வீசினால் எங்களது அணி வேறு விதமாக தெரியும். அந்த அளவிற்கு அவர் சிறப்பாக பந்து வீசக்கூடியவர். வேக பந்துவீச்சாளர்கள் கடைசி இரண்டு போட்டிகளில் சிறப்பாக செயல்படுவது எல்லாம் நல்ல விஷயமாக பார்க்கின்றேன். டிஆர்எஸ் முடிவை எடுப்பது குறித்து ராகுல் மற்றும் பவுலர்களிடம் அதிகாரத்தை கொடுத்து விட்டேன். அவர்கள் தான் எனக்காக முடிவெடுக்க வேண்டும். சில சமயம் சரியாக இருக்கும், சில சமயம் தவறாக கூட போகலாம். அடுத்தது தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்ள இருக்கிறோம். அவர்களும் சிறந்த கிரிக்கெட்டை விளையாடி வருகிறார்கள். இது நிச்சயம் நல்ல ஆட்டமாக அமையும்," என்றார்.

வரலாறு சினிமா

# இந்தியனுக்கு சாவே கிடையாது மாஸாக வெளியான 'இந்தியன்2' படத்தின் கிளிம்ப்ஸ்



**சென்னை : நவ. 4,**

**நடிகர் கமல்ஹாசன் நடித்துள்ள 'இந்தியன்2' படத்தின் அறிமுக கிளிம்ப்ஸ் தற்போது வெளியாகியுள்ளது.**

ஷங்கர் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் நடித்துள்ள 'இந்தியன் 2' படம் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் முடிந்து வெளியீட்டிற்குத் தயாராகி வருகிறது. அனிருத் இசையமைத்திருக்கும் இந்தப் படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு உள்ளது. நவம்பர் 7ம் தேதி அன்று நடிகர் கமல்ஹாசனின் பிறந்தநாள் வருகிறது. இதற்காக, இந்தப் படத்தில் இருந்து பல ஸ்பெஷல் விஷயங்களை ரசிகர்களுக்கு கொடுக்கத் தயாராகி விட்டது படக்குழு. முதலில் படத்தின் கிளிம்ப்ஸாக இந்தியன் 2 அறிமுகம் நேற்று மாலை 5.30 மணிக்கு வெளியாகி இருக்கிறது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் வெளியாக இருக்கும் இந்தப் படத்திற்கான அறிமுக கிளிம்ப்ஸை தமிழில் கமலுடனான இத்தனை வருட நட்பிற்காக நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்டு இருக்கிறார். இந்தியாவில் பல துறைகளில் லஞ்சமும் ஊழலும் பெருகி இருக்கிறது. பல பணக்காரர்கள் அடிமட்ட மக்களை எப்படி சுரண்டுகிறார்கள் என்பதை இந்த காலநிகழ்வுகளோடு காட்டி இருக்கிறது 'இந்தியன் 2'. இதை எல்லாம் தட்டி கேட்க இந்தியன் தாத்தா திரும்ப வரவேண்டும் என்றும் கம்பேக் இந்தியன் என்ற ஹேஷ்டேக்கை இணையத்தில் டிரெண்ட் செய்கிறார்கள். 'எங்கு தப்பு நடந்தாலும் அங்கு இந்தியன் வருவான். அவனுக்கு சாவே கிடையாது' என கமல்ஹாசன் இந்த அறிமுக டீசரின் ஆரம்பத்தில் பேசுகிறார்.

ஷங்கர் இயக்கத்தின் பிரம்மாண்டம் டீசரில் ஒவ்வொரு பிரேமிலும் பளிச்சிடுகிறது. அனிருத் இசையில் நடிகர்கள் சித்தார்த், பாபி சிம்ஹா, பிரியா பவானி ஷங்கர், விவேக், மனோபாலா, எஸ்.ஜே.சூர்யா, ரகுல் என பலரும் நடித்துள்ளனர். இதில் கமலின் இந்தியன் தாத்தா தோற்றம் மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது.

திரைப்படம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதமும், இதன் மூன்றாம் பாகம் 'இந்தியன் 3' அடுத்த வருடம் தீபாவளிக்கு வெளியிட இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. படத்தின் மூன்றாவது பாகத்திற்காக நடிகர் கமல்ஹாசன் கூடுதலாக 40 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'தலைவர்171' ரஜினிக்கு வில்லனாகும் ராகவா லாரன்ஸ்



**சென்னை : நவ. 4,**

**நடிகர் ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்தில் அவருக்கு வில்லனாக நடிகர் ராகவா லாரன்ஸ் ஒப்பந்தமாகியுள்ளதாகப் புதிய தகவல் வெளியாகியுள்ளது.**

'லியோ' படத்தின் வெற்றிக்குப் பிறகு இயக்குநர் லோகேஷ் கனகராஜ் தற்போது நடிகர் ரஜினிகாந்தின் 171வது படத்திற்கான ப்ரீ புரொடக்‌ஷன் பணிகளை கவனித்து வருகிறார். லோகேஷின் சினிமாட்டிக் யுனிவர்ஸூக்குள் இல்லாமல் இது தனிப்படமாக உருவாக இருக்கிறது. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் அனிருத் இசையமைக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரலில் துவங்க இருக்கிறது. இந்த நிலையில், 'தலைவர் 171' படத்தில் ரஜினிக்கு வில்லனாக நடிக்க இருப்பவர் குறித்தானத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த வகையில் நடிகர் ரஜினிகாந்தின் தீவிர ரசிகரான ராகவா லாரன்ஸ்தான் இந்த கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார். இதற்கு முன்பே 'விக்ரம்' படத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடித்த சந்தானம் கதாபாத்திரத்தில் ராகவா லாரன்ஸ் நடிப்பதாக இருந்தது. ஆனால், தேதி பிரச்சினைகள் காரணமாக அவரால் நடிக்க முடியவில்லை. இந்த நிலையில், ரஜினியின் 171வது படத்தில் அவர் நடிக்க இருக்கிறார். இதுகுறித்தான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

# காமெடி த்ரில்லரில் ஐஸ்வர்யா ராஜேஷ்



**சென்னை : நவ. 4,**

**ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியுள்ளது. துவாரகா புரொடக்‌ஷன்ஸ் சார்பில் பிளாஸி கண்ணன் தயாரிக்கிறார்.**

யோகிபாபு, ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, சந்தானபாரதி, அர்ஜுன் சிதம்பரம், பகவதி பெருமாள் உள்பட பலர் நடிக்கின்றனர். தமிழ் அழகன் ஒளிப்பதிவு செய்யும் இந்த படத்துக்கு இமான் இசை அமைக்கிறார். படத்தை இயக்கும் சவரிமுத்து கூறும் போது, 'விஸ்வாசம், அண்ணாத்த உள்பட சில படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறேன். மார்க் ஆண்டனி படத்துக்கு திரைக்கதை எழுதினேன்.

இந்த படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறேன். இது காமெடி த்ரில்லர் கதையை கொண்ட படம். ஐஸ்வர்யா ராஜேஷ் நர்ஸாக நடிக்கிறார். யோகிபாபு படம் முழுவதும் வரும் கேரக்டர். மருத்துவமனை பின்னணியில் நடக்கும் கதை இது. படத்துக்காக கிழக்கு கடற்கரை சாலையில் பிரமாண்டமான மருத்துவமனை செட் அமைக்க இருக்கிறோம். அனைவருக்கும் பிடிக்கும் விதமாக இதன் காட்சி அமைப்புகள் இருக்கும். இதுவரை காமெடி த்ரில்லர் படங்கள் வந்திருந்தாலும் அதிலிருந்து மாறுபட்டு இந்த படம் இருக்கும். படப்பிடிப்பு இப்போது நடந்து வருகிறது' என்றார்.

# 15 கோடி ரூபாய்க்கு ஆடம்பர பங்களா வாங்கிய கமல்ஹாசன் மகள்





**மும்பை : நவ. 4,**

**நடிகர் கமல்ஹாசனின் மகளும், நடிகையுமான அக்ஷரா சுமார் 15 கோடி ரூபாய் மதிப்பிலான ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை வாங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

நடிகை, உதவி இயக்குநர் என பன்முகம் கொண்டவர் அக்ஷரா ஹாசன். இவர் தற்போது மும்பையில் தனியாக வசித்து வருகிறார். இந்த நிலையில், 2,354 சதுர அடியில் சுமார் 15.75 கோடி ரூபாய் மதிப்பில் மும்பை மேற்கு புறநகர்ப் பகுதியில் உள்ள காரில் ஆடம்பர அபார்ட்மெண்ட் ஒன்றை வாங்கி இருக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த அபார்ட்மெண்ட் 1303, காரில் 16வது சாலையில் உள்ள 15 மாடி சொகுசு கோபுரத்தின் ஏக்தா வெர்வின் 13வது மாடியில் அமைந்துள்ளது. மேலும் 2,245 சதுர அடி மற்றும் இணைக்கப்பட்ட பால்கனியைக் கொண்டுள்ளது. இதுமட்டுமல்லாது, மூன்று கார் பார்க்கிங் இடங்கள் உள்ளன.

33 வயதாகக்கூடிய அக்ஷரா இந்த அபார்ட்மெண்ட்டை பாந்த்ரா ஜோடியிடம் இருந்து வாங்கியுள்ளார். இதற்கான பத்திரப் பதிவு கடந்த செப்டம்பர் 27-ம் தேதி அன்று நடந்திருக்கிறது. ஸ்டாம்ப் டியூட்டியாக 94.50 லட்ச ரூபாயை கொடுத்துள்ளார் அக்ஷரா.

ஏக்தா வெர்வ் என்பது 3BHK, 4BHK மற்றும் 5BHK அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட ஏக்தா வேர்ல்ட் குழுமத்தின் சொகுசுத் திட்டமாகும். மஹாரேரா போர்ட்டலின் படி, 15 அடுக்கு கோபுரத்தில் 18 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. பெரும்பாலும் 5BHK மற்றும் ஒரு டூப்ளக்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாறு உலகம்

# காசாவை சூழ்ந்த இஸ்ரேல் ராணுவப் படையை பைகளில் திருப்பி அனுப்புவோம்

## ஹமாஸ் எச்சரிக்கை



**டெல் அவில் : நவ. 4,**

**காசாவை சூழ்ந்த இஸ்ரேல் ராணுவப் படை வீரர்களை பைகளில் திருப்பி அனுப்புவோம்எனஹமாஸின் ராணுவப் பிரிவான இஸ் அட்-டின் அல்-காசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

காசா மீதான தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால்போர் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது. வடக்கு காசாவில் உள்ள பலஸ்தீனியர்கள்உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் பலமுறைஎச்சரிக்கைவிடுத்த போதிலும்,ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறவில்லை. அதோடு, போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல்பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியது குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில், இது தொடர்பாக இஸ்ரேல் ராணுவத்தின் செய்தி தொடர்பாளர் டேனியல் ஹகாரி, இஸ்ரேல் ராணுவ வீரர்கள் காசா பகுதியை சுற்றிவளைத்து விட்டதாகவும், இனி போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே காசாவில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் பாலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியிருந்தது. இதையொட்டி, காசாவை சூழ்ந்த இஸ்ரேல் ராணுவப் படை வீரர்களை 'பைகளில் திருப்பி அனுப்புவோம்' என ஹமாஸின் ராணுவப்பிரிவான இஸ் அட்-டின் அல்-காசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காசா போரை சில நாட்களுக்கு நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கேட்டுக் கொண்டுள்ளது சர்வதேச அளவில்கவனம்பெற்றுள்ளது. இந்த நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன், "ஹமாஸ் பெண்களையும், குழந்தைகளையும் கேடயமாகப் பயன்படுத்துகிறது. தற்போது நடைபெற்றுவரும் மோதலில், தன்னை தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்குமுழுஉரிமையும் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பொதுமக்களை பாதுகாக்கும் பொறுப்பும் இஸ்ரேலுக்கு இருக்கிறது" என தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத்தை தாண்டி பாலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர்



**ரோம் : நவ. 4,**

**பயங்கரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது அதே நேரத்தில் பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் முக்கியம் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.**

கடந்த மாதம் 7-ம் தேதி அன்று இஸ்ரேலின் தெற்கு பகுதியை குறிவைத்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு இடையிலான எல்லை ஓரத்தில் அமைந்துள்ள இஸ்ரேல் நாட்டின் பகுதியில் இருந்து பலரை பிணைக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் சிறை பிடித்து சென்றனர். அதையடுத்து காசா மீது தாக்குதலை தொடுத்தது இஸ்ரேல்.

இதில் 1,400-க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். 5,000-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதற்கு பதிலடியாக ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் ராணுவம் போர் தொடுத்து வருகிறது. இதையடுத்து, இஸ்ரேல் ராணுவ தாக்குதல்களில் இதுவரை 9,061 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 3,760 பேர் குழந்தைகள், 2,326 பேர் பெண்கள். இதுவரை சுமார் 22,000-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக' பாலஸ்தீன சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. அதோடு, இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், கடினமான இந்த நேரத்தில் இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இத்தாலியில் வெளியுறவுத் துறைக்கான செனட் உறுப்பினர்களிடையேபேசிய வெளியுறவுதுறை அமைச்சர் ஜெய்சங்கர், "அக்டோபர் 7 ஆம்தேதிஇஸ்ரேலில்நடந்தது கொடூரமான பயங்கரவாத தாக்குதல். அதற்குப் பிறகு நடந்த செயல்கள் அனைத்தும் அந்தப் பகுதியையேவேறுதிசைக்குக் கொண்டு சென்றுள்ளது. பயங்கரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது, அதே நேரத்தில் பாலஸ்தீனர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் முக்கியம்.

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை முக்கியமானதாகும். ஒருபோதும் மோதல் மற்றும் பயங்கரவாதத்தின்மூலம்தீர்வு காண முடியாது. தற்போதைய சூழ்நிலையில் மனிதாபிமான சட்டம்மதிக்கப்பட வேண்டும். ஹமாஸின் பயங்கரவாத தாக்குதலை கண்டித்து, இஸ்ரேலுக்கு முழு ஆதரவை தெரிவித்த முதல் உலக தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடியும் ஒருவர். அங்குமீண்டும்ஸ்திரத்தன்மை ஏற்படவேண்டும். அப்பகுதியில் தொடர்ந்து மோதல் நீடிக்கக் கூடாது" என்றார்.

# ஈரான் போதை பொருள் மறுவாழ்வு மையத்தில் திடீர் தீ விபத்து : 32 பேர் பலி



**தெஹ்ரான் : நவ. 4,**

**ஈரானில், தீ விபத்தில் காயமடைந்தவர்கள் லாங்கிரவுடு நகரில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.**

ஈரானின் காஸ்பியன் கடல் பகுதியையொட்டிய கிலான்மாகாணத்தில்போதை பொருள் மறுவாழ்வு மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில்,திடீரென இந்த மையத்தில்நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது.

இதுபற்றிகாலை6மணிக்கு முன் தீயணைப்பு துறைக்கு தகவல் அளிக்கப்பட்டது. எனினும், இந்த சம்பவத்தில் சிக்கி 32 பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர் என அந்நாட்டில் இருந்து வெளிவரும் ஈரான் வயர் என்ற செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது.

இதனை தொடர்ந்து, காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு தெஹ்ரானில் இருந்து வடமேற்கே 200 கி.மீ. தொலைவில் உள்ள லாங்கிரவுடு நகரில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் பற்றி அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் உடனடியாகசெயல்பட்டு,தீயை அணைத்தனர். இந்ததீவிபத்து ஏற்பட்டதற்கானகாரணம்பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட குழப்பம்

# ஒரே வார்த்தையில் ஓட்டலை அலறவிட்ட சுற்றுலா பயணி



**லிஸ்பன் : நவ. 4,**

**ஓட்டலில் சோதனை செய்வதற்கு முன்னர் அங்கிருந்து வெளியேற முயன்றதால் அவரை கைது செய்ததாக தெரிவித்தார்.**

வெளிநாடுகளில் பயணம் செய்யும்போது பலருக்கும் மொழிப்பிரச்சனை ஏற்படுவது வழக்கமானதுதான். அதுவும் அவர்களின் தாய்மொழி வழக்கத்தில் இல்லாத நாடுகளுக்கு சென்றால் கவனமாகவேபேசவேண்டும். கொஞ்சம் வார்த்தையை மாற்றி பேசினாலும் சிக்கலை சந்திக்க நேரிடும். அப்படி ஒரு சிக்கலை சந்தித்திருக்கிறார் அஜர்பைஜான் நாட்டு சுற்றுலாப் பயணி.

போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகரமான லிஸ்பனில் உள்ள ஒரு ஓட்டலுக்கு, கடந்த சில தினங்களுக்கு முன் அஜர்பைஜானைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் வந்துள்ளார். 36 வயது நிரம்பிய அவருக்கு ரஷிய மொழிதான் பேசத் தெரியும். ஓட்டலில் தனக்கான உணவு ஒன்றை வாங்க முயற்சிக்கும் பொழுது அவருக்கு அந்த இடத்தின் மொழியான போர்ச்சுகீஸ் மொழி தெரியாததால்மொழிபெயர்ப்பு செயலியை (ஆப்) பயன்படுத்தியிருக்கிறார்.

அந்த ஓட்டலில் மாதுளை பழச்சாறு ஆர்டர் செய்ய விரும்பியிருக்கிறார். இதற்காக மொழிபெயர்ப்பு செயலியை பயன்படுத்தியபோது மாதுளை பழச்சாறுக்குப் பதிலாக, அதன் ஆங்கில வார்த்தையான pomegranate-ஐ தவறாக மொழிபெயர்த்து வழங்க, இறுதியில் grenade (கையெறி குண்டு) என்று ஆர்டர் செய்துவிட்டார். அவர் கூறியதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த வெயிட்டர், கையெறி குண்டு வைத்து மிரட்டுவதாக நினைத்து காவல்துறைக்கு தகவல் கொடுத்துவிட்டார்.

இதைத்தொடர்ந்து காவல் துறை அதிகாரிகள் விரைந்து வந்து சுற்றுலா பயணியை கைது செய்து அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். அவர் தங்கி இருந்த ஓட்டல் அறையிலும் சோதனை நடத்தப்பட்டது. ஆனால் அவரிடமோ, அவர் தங்கியிருந்த அறையிலோ எந்த ஒரு ஆயுதமும் இல்லை. எனவே, அவர் விடுவிக்கப்பட்டார். இந்த சம்பவத்தால் ஓட்டல் வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதுபற்றி போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், ஓட்டலில் சோதனை செய்வதற்கு முன்பே அங்கிருந்து வெளியேற முயன்றதால் அவரை கைது செய்ததாக தெரிவித்தார்.

# எலான் மஸ்கின் மகன் பெயர் சந்திரசேகர் மத்திய அமைச்சர் வெளியிட்ட ஆச்சரிய தகவல்






**இங்கிலாந்து : நவ. 4,**

**ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனர், டெஸ்லா சிஇஓ மற்றும் ட்விட்டர்சமூகவலைதளத்தின் உரிமையாளரான எலான் மஸ்க் தனது மகனுக்கு சந்திரசேகர் என்று பெயரிட்டுள்ள தகவல் ஆச்சர்யத்தை உருவாக்கியுள்ளது.**

மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் இங்கிலாந்தில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் சமீபத்தில் பங்கேற்றார். அப்போது அவர் உலகின் நம்பர் 1 கோடீஸ்வர தொழிலதிபரும், டெஸ்லா உரிமையாளருமான எலான் மஸ்க்கை சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின்போது, மத்திய அமைச்சர் சந்திரசேகர் தனக்கும் எலான் மஸ்க்கிற்கும் இடையே நடந்த உரையாடல் என்ன என்பதை சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளார்.

அதில், எலான் மஸ்க்கின் மகனின்முழுப்பெயர்ஷிவோன் சந்திரசேகர் ஜிலிஸ் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். எலான் மஸ்க் இந்திய விஞ்ஞானியும் நோபல் பரிசு பெற்றவருமான பேராசிரியர் எஸ்.சந்திரசேகரால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். எனவே அவரின் நினைவாக தனது மகனின் பெயரின் நடுவில் சந்திரசேகர் என்ற பெயரை எலான் மஸ்க் வைத்துள்ளார். இதனை மஸ்க்கே கூறியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். விஞ்ஞானி சந்திரசேகர் 1983ல் நோபல் பரிசு பெற்றார்.

உலகின் நம்பர் 1 பணக்காரரான எலான் மஸ்க் சர்ச்சைகளுக்கு சொந்தக்காரராக உள்ளார். அவர் கடந்த ஆண்டு விலைக்கு வாங்கியட்விட்டரில் அதிரடி மாற்றங்களை செய்து அடிக்கடி தலைப்பு செய்திகளில் இடம்பிடிப்பவர். விக்கிபீடியா பக்கத்தில் இவருக்கு 11 குழந்தைகள் உள்ளதாக தகவல் பதிவாகியுள்ளது.

# செயற்கை நுண்ணறிவு மனித குலத்துக்கு சேதாரம் சேர்க்கும் எச்சரிக்கை மணியடிக்கும் ரிஷி சுனக்



**இங்கிலாந்து : நவ. 4,**

**ஏஐ என்று சுருக்கமாக அழைக்கப்படும் 'செயற்கை நுண்ணறிவின் அபரிமிதமான வளர்ச்சி, மனித குலத்துக்கே எதிரானதாக அமைந்துவிடும்' என்று எச்சரிக்கை மணியடித்திருக்கிறார் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்.**

செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வாழ்வின் போக்கினை எளிதாக்கவும், சிரமங்களை போக்கவும் செயற்கை நுண்ணறிவின் பல்துறை பயன்பாடுகள் பாராட்டு பெற்று வருகின்றன. ஆனால் செயற்கை நுண்ணறிவின் கட்டுப்பாடற்ற வளர்ச்சி, அதன் நோக்கம் மற்றும் அதனை உருவாக்கிய மனித குலம் என இரண்டுக்குமே பாதகம் சேர்த்துவிடும் என்ற எச்சரிக்கை குரல்களும் எழுந்து வருகின்றன.

அக்குரல்களில் ஒருவராக இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கும் சேர்ந்திருக்கிறார். செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் உபயோகிப்பது, கட்டுப்பாடுடன் பயன்படுத்துவது மற்றும் விளைவுகளை கண்காணிப்பது ஆகியவற்றை ரிஷி சுனக் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். செயற்கை நுண்ணறிவு கிரிமினல்கள் கையில் சிக்குவதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் அவர் எச்சரித்து வருகிறார்.

நவீன ஆயுதங்களை தவறான நோக்கத்தில் பயன்படுத்துவது, போலி செய்திகளை பரப்புவது, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றில் ஏஐ பயன்பாடுகள் குறித்தும் அவர் எச்சரித்து வருகிறார். இதனிடையே ஏஐ பாதுகாப்பினை பரிசோதிக்கும் 'உலகின் முதல் ஏஐ பாதுகாப்பு நிறுவன'த்தை இங்கிலாந்து உருவாக்கிறது.

ஒருபுறம் சூப்பர் கம்ப்யூட்டர்கள் மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டர்கள் ஆகியவற்றில் பல பில்லியன் பவுண்டுகளை செலவிடும் இங்கிலாந்து, மறுபுறம் ஏஐ வளர்ச்சிக்கு பிரேக் பிடிக்கும் நடைமுறைகளிலும் தீவிரம் காட்டுகிறது. அதன் வெளிப்பாடாகவே, ஏஐ அபரிமித வளர்ச்சி என்பது மனித குலத்துக்கே எதிரானதாக மாறிவிடும் என்று எச்சரித்திருக்கிறார் ரிஷி சுனக்.

## ஓர் ஆண்டில் 97,000 பேர் கைது

# அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்து பிடிபடும் இந்தியர்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத அளவு அதிகரிப்பு



**வாஷிங்டன் : நவ. 4,**

**கடந்த ஓர் ஆண்டில் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற97,000 இந்தியர்களில் பெரும்பாலானோர் குஜராத் மற்றும் பஞ்சாப் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்று அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.**

அமெரிக்காவிற்குள் பல்வேறு எல்லைகள் வழியாக சட்ட விரோதமாக நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை சமீப காலமாக பன்மடங்கு அதிகரித்துள்ளதாக அமெரிக்க குடியுரிமை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அமெரிக்கா சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்புத் துறை தகவலின்படி 2022 அக்டோபர் முதல் 2023 செப்டம்பர் வரை சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்த 96,917 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 30,010 பேர் கனடா வழியே, 41,770 பேர் மெக்சிகோ வழியாகவும் எல்லை தாண்டி நுழைய முயன்று அமெரிக்க அதிகாரிகளிடம் பிடிபட்டுள்ளனர். மீதமுள்ளோர், அமெரிக்க எல்லைக்குள் நுழைந்த பிறகு அதிகாரிகளின் சோதனை நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019-20 கால கட்டத்தில் அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற 19,883 இந்தியர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், 2023ல் அந்த எண்ணிக்கை 5 மடங்கு அதிகரித்து இருப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்றவர்களில் குஜராத், பஞ்சாப் மாநிலத்தவர்களே அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் எல்லை தாண்டி பிடிபடுபவர்கள் வெறும் சிறிய விகிதம் தான் என்றும் ஒருவர் பிடிபடும் போது, குறைந்தது 10 பேர் வெற்றிகரமாக அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக நுழைவதாக குஜராத் போலீஸ் உயரதிகாரி கூறுகிறார்.

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு : 5 பேர் பலி, 20 பேர் காயம்



**கைபர் பக்துன்குவா : நவ. 4,**

**போலீசாரின் விசாரணையில், மோட்டார் பைக் ஒன்றில் வெடிகுண்டு வைக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது.**

பாகிஸ்தானில் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் தேரா இஸ்மாயில்கான் மாவட்டத்தில் போண்டா பஜார் பகுதியில் டேங் அட்டா என்ற இடத்தில் திடீரென்று நேற்று குண்டுவெடிப்பு நடந்தது.

இந்த சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர். இதனை தொடர்ந்து, அருகேயுள்ள மருத்துவமனைகளில் அவசரகால நடவடிக்கைகளுக்கு தேவையான விசயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது பற்றிய விசாரணையில், மோட்டார் பைக் ஒன்றில் வெடிகுண்டு வைக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது. அந்த பகுதியில், துப்பாக்கி சூடு சத்தமும் கேட்டுள்ளது. இந்த சம்பவத்தின் தொடர்ச்சியாக, வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு மற்றும் போலீசார் உடனடியாக அந்த பகுதிக்கு சென்றனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# இலங்கையில் நிர்மலா சீதாராமன் : அண்டை நாடுகளிடையே நெருங்கிய நட்புறவை மேற்கொள்ளும் இந்தியா





**இலங்கை : நவ. 4,**

**இலங்கையில் 3 நாட்கள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணெய் கிடங்குகளை பார்வையிடுவது, வழிபாட்டு தலங்களில் சூரிய மின்சக்தி உற்பத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது என முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.**

இந்நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவது, இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது, உள்ளிட்ட மீனவர்களின் வாழ்வாதார பிரச்னைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்என்றகோரிக்கையும் முன்வைக்கப்படுகிறது.

இந்தியஅரசின்பாதுகாப்பு மண்டலங்களுக்குள் வரும் அண்டை நாடுகளிடையே நல்லுறவை மேம்படுத்துவது என்பது இன்று, நேற்று நடக்கும் ஒன்றல்ல. கடந்த கால காங்கிரஸ் ஆட்சி தொடங்கிதற்போதையமோடி அரசு வரை தொடர்கிறது. 2014ஆம் ஆண்டு நாட்டின் பிரதமராக முதல்முறை பதவியேற்றபோதே, அப்போதைய இலங்கை அதிபர்மகிந்தராஜபக்சவையும் அழைத்திருந்தார் பிரதமர் மோடி. அப்போது மோடி முன்வைத்த கொள்கை திட்டம் என்ன தெரியுமா? Neighborhood First என்ற கொள்கை. அதாவது அண்டை நாடுகளுக்கே முன்னுரிமை என்பது. இலங்கை மீது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தில் இனப்படுகொலை குற்றச்சாட்டு கூறப்பட்ட போதும், இந்தியா வாக்கெடுப்பைபுறக்கணித்து, தனது ஆதரவை பகிரங்கப்படுத்தியது.


2018-ல் இலங்கை தமிழர்களுக்கு வீடுகள் வழங்கும்திட்டத்துக்கு மத்திய அரசு சுமார் ரூ.2,000 கோடியை ஒதுக்க, முதற்கட்டமாக 400க்கும் மேற்பட்ட வீடுகளை காணொலி மூலம் பங்கேற்று வழங்கினார் பிரதமர் மோடி. 2-வது முறை ஆட்சி பொறுப்பேற்ற பிரதமர் மோடி, இலங்கைக்கு 3 முறைபயணம் மேற்கொண்டுள்ளார். அவரது பயணத்தின் ஒரு பகுதியாக அணுசக்தி, பொருளாதாரம், கல்வி, கலாசாரம் ஆகியவற்றில்ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தனைக்கும் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் வரை, சீனாவுடன் அதிக நெருக்கத்துடன் இருந்தது. ஹம்பந்தோட்டை துறைமுக ஒப்பந்தம், கொழும்பு துறைமுக நகர திட்டம் என இலங்கையில் பல லட்சம் கோடிகளை கொட்டி சீனா ஆக்கிரமித்து கொண்டிருந்ததால் சீனாவின் ராணுவ கப்பல்கள் இலங்கைக்கு பயணித்த போதெல்லாம் அது இந்திய எல்லையில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் எல்லை பிரச்னை நீடிப்பதால், வெளியுறவு கொள்கையில் பிரதமர் மோடி தோற்றுவிட்டதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் விமர்சித்தனர். இந்த நிலையில் தான், கடும் பொருளாதார நெருக்கடியால் திவாலான இலங்கைக்கு பல்வேறு நிதி திட்டங்களை அறிவித்தது மத்திய அரசு. அத்துடன்எரிபொருள், மருந்து மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளையும் அனுப்பி வைத்தது.

2022-ல் மட்டும் சுமார் ரூ.3,000 கோடி மதிப்பிலான உதவிகளை வழங்கியது மத்திய அரசு. இதன் தொடர்ச்சியாக இந்தியா வருகை தந்த அதிபர் ரணில் விக்ரமசிங்கே, யுபிஐ பயன்பாட்டை இலங்கையில் அங்கீகரிப்பது, எரிசக்தி, விமான மற்றும் கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர். இதன் விளைவாக நாகை - காங்கேசன் துறை பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கையில் சுற்றுலா, எரிபொருள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் இந்தியா அதிகளவிலான முதலீட்டை ஊக்குவிக்கும் என தெரிவித்திருந்தார். தற்போது நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் பயணம் மேற்கொண்டுள்ளதால், ஜெய்சங்கர் அறிவித்தபடி, பல்வேறு திட்டங்களில் முதலீடை ஊக்குவிக்கும் அறிவிப்புகள் வெளியாகுமா என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில், எதிர்பார்க்காத வகையில் மகளிருக்கு 33 சதவீத அதிகார பகிர்வளிக்கும்மசோதாவை நிறைவேற்றியதுபோல், இலங்கையில் தமிழர்களுக்கு அதிகார பகிர்வளிக்கும் 13ஆவது சட்ட திருத்தத்தை அமல்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் அளிக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.



# நூறாவது சுதந்திர தினத்தில் உலக நாடுகளை வழிநடத்தும் நாடாக இந்தியா திகழும்

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தமிழக அரசுக்கு நீதிமன்றம் புதிய கேள்வி





# அமைச்சர் எ.வ.வேலு தொடர்புடைய பல்வேறு இடங்களில் வருமான வரித்துறை சோதனை


| சென்னை / புதுக்கோட்டை | 04.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

வாசுதேவ் பல்வந்த் பட்கே , இந்தியப் புரட்சியாளர் (பி.1845) (இ.1883)



ஜானகி அம்மாள் , இந்தியத் தாவரவியலாளர் (பி.1897) (இ.1984)



சகுந்தலா தேவி , இந்தியக் கணிதவியலாளர், வானியலாளர் (பி.1929) (இ.2013)



## இன்றைய நினைவு நாள்

திருமெய்ஞானம் நடராஜசுந்தரம் பிள்ளை , தமிழக நாதசுவரக் கலைஞர் (பி.1926) (இ.1981)



டி. கே. இராமானுஜக் கவிராயர் , தமிழறிஞர், புலவர் (பி.1905) (இ.1985)



கி. வா. ஜகந்நாதன் , தமிழக இதழாளர், எழுத்தாளர், சொற்பொழிவாளர் (பி.1906) (இ.1988)



க. நெடுஞ்செழியன் , தமிழறிஞர், பேராசிரியர் (பி.1944) (இ.2022)

